# செயலாற்றுகை அறிக்கை

# 2015



## வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம்

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| ❖ | உள்ளடக்கம் | 2 |
| ❖ | நன்றி | 3 |
| ❖ | நோக்கு மற்றும் பணி | 4 |

| | |
|---|---|
| 1. பணிப்பாளர் நாயகத்தின் ஆசிச் செய்தி | 5-9 |
| 2. நிர்வாகப் பிரிவின் செயலாற்றுகை | 10-15 |
| 3. பயிற்சிப் பிரிவின் செயலாற்றுகை | 17-23 |
| 4. புலனாய்வுப் பிரிவின் செயலாற்றுகை | 24-25 |
| 4.1 2015 ஆம் ஆண்டின் அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம் | 26 |
| 5. சமூக நலன்புரிப் பிரிவின் செயலாற்றுகை | 27-34 |
| 6. சமூக பாதுகாப்புப் பிரிவின் செயலாற்றுகை | 35-37 |
| 7. சமூக அபிவிருத்திப் பிரிவின் செயலாற்றுகை | 38-49 |
| 8. சமுதாய நிறுவனப் பிரிவின் செயலாற்றுகை | 50-53 |
| 9. வாழ்வாதார அபிவிருத்திப் பிரிவின் செயலாற்றுகை | 54-69 |
| 10. சந்தைப்படுத்தல் அபிவிருத்திப் பிரிவின் செயலாற்றுகை | 70-80 |
| 11. தகவல் தொழில்நுட்பப் பிரிவின் செயலாற்றுகை | 81 |
| 12. ஊடகப் பிரிவின் செயலாற்றுகை | 82 |
| 13. சமுதாய வங்கிப் பிரிவின் செயலாற்றுகை | 83-114 |
| 14. கணக்கு அறிக்கை | 115 |

# வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம்

## நன்றி

2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சிச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் அபிலாஷைகளை இலக்காகக் கொண்டு, நாட்டுக்கும், நாட்டின் ஏழை மக்களுக்கும் வினைத்திறன்மிக்கதும் தரம்வாய்ந்ததுமான சேவையினை வழங்குவதற்காக 2015 ஆம் ஆண்டில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் அனைத்து ஊழியர் குழாத்திற்கு முதற்கண் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மேலே குறிப்பிட்ட சேவைகளை வழங்குவதற்கு, உரிய வழிகாட்டல்களை வழங்கி, இத் திணைக்களத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய நிதி அமைச்சின், பொதுத் திறைசேரியின், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உரிய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும், முழு ஊழியர் குழாத்தின் சார்பாகவும் நன்றிகளைகத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், திணைக்களத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள், நிவாரணங்கள் மற்றும் சமூக நலன்புரிச் சேவைகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கு வழங்கி வரும் ஒத்துழைப்புக்காகவும் கடமைகளை அர்ப்பணிப்புடன் நிறைவேற்றியமைக்காகவும் நாட்டிலுள்ள மாவட்ட செயலாளர்கள்/ மாவட்ட மேலதிகப் பணிப்பாளர் நாயகங்கள், பிரதேச செயலாளர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இறுதியாக 2015 ஆம் ஆண்டில் எமது திணைக்களத்தின் கடமைகளை மேற்கொள்கின்ற பல வகைகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அரசாங்க நிறுவனங்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் தனிப்பட்ட ஆட்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சந்ரா விக்கிரமசிங்க**
**பணிப்பாளர் நாயகம்**
**வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம்**

# எமது நோக்கு

**“வறுமையை ஒழித்து, வாழ்வாதாரத்தின் ஊடாக வலுவூட்டப்பட்ட சமுதாயமொன்று ”**

# எமது பணி

**“சமுதாயத்துக்கு வலுவூட்டுதல், மனித மூலதனத்தை அபிவிருத்தி செய்தல், வாழ்வாதாரச் செயற்பாடுகளை ஊக்குவித்தல், கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் என்பவற்றின் ஊடாக தேசிய அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்தலும் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, வறுமை ஒழிக்கப்பட்டதும் சமூக நீதியை உறுதிப்படுத்துவதுமான சுபீட்சமான தேசமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு உச்ச அளவில் பங்களிப்புச் செய்தலும்”**

## 01. பணிப்பாளர் நாயகத்தின் ஆசிச் செய்தி

1995 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டிருந்த இலங்கை சமுர்தி அதிகாரசபை, 1996 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டிருந்த இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகாரசபை, 2005 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டிருந்த இலங்கை மலையக அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய மூன்று அதிகார சபைகளையும் மலைநாட்டு கிராம புனரமைப்புத் திணைக்களம், சமுர்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் ஆகிய இரண்டு திணைக்களங்களையும் உள்ளடக்கியதாக 05 அரசாங்க நிறுவனங்களை ஒருங்கிணைத்து, 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க திவிநெகும சட்டத்தின் மூலம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் தாபிக்கப்பட்டது. வாழ்வின் எழுச்சிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, கௌரவ பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் 2014 ஜனவரி 03 ஆந் திகதிய 1843/47 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதன் பின்னர், இத்திணைக்களம் உத்தியோக பூர்வமாகத் தாபிக்கப்பட்டது. பின்னர், மேற்குறித்த 05 நிறுவனங்ளிலும் பணி புரிந்த 26,000 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் புதிய திணைக்களத்திற்கு உள்வாங்கப்பட்டனர். இத்திணைக்களத்தின் செயற்பாடுகள் நாட்டின் 25 மாவட்டங்களிலுமுள்ள 331 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 14,022 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய திணைக்களத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாவட்ட மேலதிக பணிப்பாளர்களாக மாவட்ட செயலாளர்கள், மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர்கள், பிரதேச செயலாளர்கள் நேரடியாக உதவியளிக்கின்றனர்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திச் செயன்முறையை ஊக்குவிக்கும் நோக்கத்தை அடையும் நோக்கில், வறுமையை ஒழிப்புக்கும் சமூக நீதியை உறுதிப்படுத்துவதற்குமான தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்தி, தனி நபர்களையும், குடும்பங்களையும், குழுக்களையும், சமுதாயங்களையும் மையமாகக் கொண்ட வாழ்வாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை மேம்படுத்துவது இத்திணைக்களத்தின் பிரதான குறிக்கோள்களில் ஒன்றாகும். இதற்காக, வாழ்வின் எழுச்சி சமுதாய அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு, தேசிய, வலய மற்றும் மாவட்ட மட்டங்களில் ஒருங்கிணைப்பு வலையமைப்புக்களைக் கட்டியெழுப்புவதன் ஊடாக, நுண் நிதி வங்கி முறைமையை அபிவிருத்தி செய்து ஊக்குவிப்பதன் ஊடாக சமுதாய மட்டத்திலான தேசிய அபிவிருத்தி செயன்முறைக்காக மக்களை ஒன்று திரட்டுதல் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் மற்றுமொரு அடிப்படை குறிக்கோளாகும். இதற்காக, 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க இத் திணைக்களம் பின்வரும் மூன்று பிரதான துறைகளைக் கொண்டதாக இயங்கி வருகின்றது.

(I) பதவிக் கட்டமைப்பு கொண்ட திணைக்களத் துறை

(II) சமுதாய வங்கி முறைமைத் துறை

(III) சமுதாய நிறுவனங்கள் துறை

## (I) பதவிக் கட்டமைப்பு கொண்ட திணைக்களத் துறை

திணைக்களத்தின் பதவிக் கட்டமைப்பு கீழே தரப்படுகின்றது. அதாவது, தலைமையகம், பணிப்பாளர் நாயகம் மற்றும் நிர்வாகம், சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக நலனோம்பல், சமுதாய நிறுவனங்கள், வாழ்வாதார அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்பம், ஊடகம், சமுதாய வங்கி மற்றும் கணக்கு ஆகிய பிரிவுகளின் தலைவர்களைக் கொண்ட 12 பிரிவுகள் ஒவ்வொரு கடமைகளை மேற்கொள்கின்றன. மாவட்ட மட்டத்தில் மேலதிகப் பணிப்பாளர் நாயகங்களின் (மாவட்ட செயலாளர்களின்) வழிகாட்டலின் கீழ், மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர் மற்றும் ஊழியர் குழாத்தின் ஊடாக வலய மற்றும் மாவட்ட மட்டங்களின் உரிய கடமைகள் நிறைவேற்றப்படுகின்றன. சமுதாய வங்கிச் செயற்பாடுகள், சமுதாய நிறுவனங்களை உருவாக்குதல், அபிவிருத்திச் செயற்பாடுகளை கிராமிய மட்டத்தில் நடைமுறைப்படுத்துதல் என்பன பிரதேச செயலாளர்களின் தலைமையில் வாழ்வின் எழுச்சி முகாமையாளர்கள், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட ஏனைய அனைத்து அலுவலக மற்றும் கள உத்தியோகத்தர்களால் நிறைவேற்றப்படுகின்றன.

## (II) சமுதாய வங்கி முறைமைத் துறை

பின்வருவன இவ் அமைச்சின் பணிகளாகும். அதாவது, தலைமையகத்தில் வங்கி நிதிப் பணிப்பாளரின் கீழ் நிர்வகிக்கப்படும் ஊழியர்கள், நாடு முழுவதிலுமுள்ள 331 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குமான சமுதாய வங்கிச் சங்கங்கள் மற்றும் தாய்ச் சங்கங்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் இயங்கும் 1074 வங்கிகளினதும் ஊழியர்கள் ஊடாக இந்த வங்கி முறைமை இயங்கி வருகின்றது. அதன் மூலம், சமுர்தி உதவிகளைப் பகிர்தல், பயனாளிகளின் கட்டாயச் சேமிப்பு வைப்புக்களைப் பேணி வருதல், பயனாளிகளுக்கும் குறைந்த வருமானம் பெறுவோருக்கும் நுண் கடன்களை வழங்குதல், மீதமுள்ள நிதிகளை அதிக பயன்களைத் தரும் மூலங்களில் முதலீடு செய்தல், வேறு சமுக நலனோம்பல் செயற்பாடுகள் முன்னெடுத்தல் என்பவற்றை மேற்கொள்கின்றது.

2015.12.31 ஆந் திகதி வரையில் வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்கான கடன்கள் அத்தியவசியமாகத் தேவைப்படுகின்ற கிராமிய மக்களுக்குப் பல்வேறு முறைகளில் வழங்கப்பட்டிருந்த கடன் 26184 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. அதற்காக கடன் தொகை 462970 ஆகும். 1999 தொடக்கம் 2015 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான கடன்களின் திரட்டுப் பெறுமதி 6,851,459 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. மேலும் இப்பிரிவின் அனைத்துச் செயற்பாடுகளும் தகவல் தொழில்நுட்ப முறைமையின் ஊடாகச் செயன்முறைப்படுத்தப்பட்டு, மக்களுக்கு மிகவும் வினைத்திறன்மிக்கதும் தரம் வாய்ந்ததுமான சேவையினை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பிரிவின் செயலாற்றுகை தொடர்பான தகவல்கள் அத்தியாயம் 13 இல் தரப்பட்டுள்ளன.

## (III) சமுதாய அமைப்புக்கள் துறை

வாழ்வின் எழுச்சிச் சட்டத்தின் 09 தொடக்கம் 14 ஆம் பிரிவுகளுக்கமைய, சமுதாய நிறுவனங்களை அமைப்பது தொடர்பான ஏற்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. சட்டத்தின் குறித்த பிரிவுகளின் படி, நியதிச் சட்ட அடிப்படையில் உத்தியோகபூர்வமாக சமுதாய நிறுவனங்களை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், தற்போது நியதிச் சட்ட நகல் வரைபு தயாரிக்கப்பட்டு சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சமுதாய நிறுவனங்களைப் பலப்படுத்தி, சமுதாயத்துக்கு வலுவூட்டு அவர்களை சமூக பொருளாதார ரீதியில் அபிவிருத்தி செய்து, சமுதாய வங்கி மற்றும் வாழ்வாதார நிகழ்ச்சிக்கு ஆற்றுப்படுத்தும் நோக்கில், 2014 ஆம் ஆண்டில் 38,696 சமுதாய அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை அடையும் நோக்கில், 2015 ஆம் ஆண்டுகளுள் பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சிகள் 03 உம் (சிங்களம் 89 மற்றும் தமிழ் 01) நடாத்தப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட 139 முகாமையாளர்களுக்கு (சிங்களம் 89 மற்றும் தழிழ் 50) சமுதாய அமைப்புக்களை சக்தி மிக்கதாக்குவதற்காகவும் மேம்படுத்தவதற்காகவும் தெளிவுபடுத்தல்கள் வழங்கப்பட்டன.

அடுத்த கட்ட நடவடிக்கைகள் எதிர்வரும் வருடங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன. இப்பிரிவின் 2015 செயலாற்றுகை தொடர்பான விரிவான தகவல்கள் அத்தியாயம் 08 இல் தரப்பட்டுள்ளன.

## வாழ்வாதார அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்திச் செயற்திட்டங்கள்

2015 ஆம் ஆண்டில் வாழ்வாதார அபிவிருத்தித் துறைக்கு 1200 மில்லியன் ரூபாவும் அமைச்சின் ஒதுக்கீடான 1,353.6 மில்லியன் ரூபாவும் அடங்கலாக 2,553.6 மில்லியன் ரூபா வாழ்வாதார அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. வாழ்வாதார அபிவிருத்தித் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களில், விவசாய அபிவிருத்திச் செயற்திட்டம், விலங்கு வேளாண்மைச் செயற்திட்டம், மீன்பிடி அபிவிருத்திச் செயற்திட்டம், சுயதொழில் கைத்தொழில் அபிவிருத்தி போன்ற செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வருமான மட்டத்தை மேம்படுத்துவதற்கும் சுகாதார மற்றும் போசணை மட்டத்தை மேம்படுத்துவதன் மூலம் தொழிற் சந்தைக்குப் பொருத்தமான தொழிலாளர்களை வழங்குவதற்காகத் தொழிற் பயிற்சி வழங்குவதும் அவற்றின் குறிக்கோளாகும். அபிவிருத்திச் செயற்திட்டங்கள் முக்கிய இடத்தைப் பெற்றன.

2015 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் அனைத்து அபிவிருத்தி பிரிவுகளினால் 2083.06 மில்லியன் ரூபா செலவில் (திணைக்கள ஒதுக்கீடு ரூ.மில்லியன் 988.25 உம் அமைச்சின் ஒதுக்கீடு ரூ.மில்லியன் 1094.81 உம்) இலக்காகக் கொண்ட வேலைத்திட்டங்கள் 110,672 இல் 85,455 திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டன. அதற்கமைய 2015 ஆம் ஆண்டில் நிறைவடைக்க முடிந்த மூலதன முன்னேற்றம் 82% ஆவதுடன், பௌதீக முன்னேற்றம் 77% ஆகம்.

இத்துறையின் கீழ் மேலே குறிப்பிடப்பட்ட உப பிரிவுகளும் மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களும், அவற்றுக்காகச் செலவிடப்பட்ட தொகைகளும் செயற்திட்டப் பயனாளிகள் தொடர்பான மேலதிக தகவல்களும் 09 ஆம் அத்தியாயத்தில் தரப்பட்டுள்ளன.

## ஏனைய துறைகளின் செயலாற்றுகை

2015 ஆம் ஆண்டில், ஏனைய சேவைகள் மற்றும் அபிவிருத்திப் பிரிவுகளின் செயற்திறன் தொடர்பான தரவுகள் மற்றும் விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளமைக்கமைய இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. உதவிச் சேவை என்ற வகையில் நிர்வாக, பயிற்சி மற்றும் ஆய்வுப் பிரிவின் செயலாற்றுகை 02,03 மற்றும் 04 ஆம் அத்தியாயங்களிலும், ஆம் அத்தியாயத்திலும், சமூகப் பாதுகாப்பு, சமூக நலன்புரிப் பிரிவின் செயலாற்றுகை தொடர்பான விரிவான தகவல்கள் 05 மற்றும் 06 ஆம் அத்தியாயத்திலும், சந்தைப்படுத்தல் பிரிவின் செயலாற்றுகை சமூக அபிவிருத்திப் பிரிவின் செயலாற்றுகை தொடர்பான தகவல்கள் 07 அத்தியாயத்திலும் தரப்பட்டுள்ளன. இவை தவிர, விற்பனை பிரிவின் செயலாற்றுகை அத்தியாயம் 10 இலும் தகவல், தொழில்நுட்பப் பிரிவின் செயலாற்றுகை 11 ஆம் அத்தியாயத்திலும், ஊடகப் பிரிவின் செயலாற்றுகை 12 ஆம் அத்தியாயத்திலும் கணக்கீட்டு அறிக்கைகள் தொடர்பான விபரங்கள் 14 ஆம் அத்தியாயத்திலும் தரப்பட்டுள்ளன.

இத் திணைக்களத்தின் பிரதான நிகழ்ச்சியான வாழ்வின் எழுச்சி (சமூர்த்தி) உதவி நிகழ்ச்சித் திட்டம் 2015 ஆம் ஆண்டிற்குரிய சாராம்சப் படுத்தப்பட்ட முன்னேற்றம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. உதவிபெற்றவர்கள் 1453078 பேருக்கு வழங்கப்பட்ட உதவிப் பணத்தின் தொகை ரூபா மில்லியன் 40210 ஆவதுடன், இத் தொகை செலவிடப்பட்டது. அவ் வருடத்தில் திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா மில்லியன் 41,760.00 முழு ஒதுக்கீட்டு:த் தொகையில் ஆகும்.

இவை தவிர சமூக பாதுகாப்பு நிகழ்ச்சியின் கீழ் 2015 ஆம் ஆண்டின் சமூக பாதுகாப்பு நிதியத்தின் ரூபா 638 செலவிடப்பட்டு பயனாளிகள் 275,024 பேருக்கு தங்களது அன்றாட வாழ்க்கையில் பிறப்பு வரை முக்கியமான சந்தர்ப்பங்களின் போது உதவி வழங்குவதற்கு முடிந்தது.

மேற்குறிப்பிட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக 2015 ஆம் ஆண்டில் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி மற்றும் கட்டமைப்பு அபிவிருத்திக்காக திறைசேரியில் ரூபா மில்லியன் 8 கிடைக்கப்பெற்றதுடன், ரூபா மில்லியன் 6.31 செலவிடப்பட்டு அலுவலக ஊழியர்கள்கள் 9400 பேருக்கு பயிற்சி சந்தர்ப்பம் மற்றும் பயன்கள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கான முன்னேற்றம் 79வீதமாகும்.இப் பிரிவனால் வேலைத்திட்டம் 67 நடைமுறைப்படுத்துவதற்கு எண்ணியிருந்ததுடன் 58 வேலைத்திட்டமே நடாத்தப்பட்டது. இதற்கான பௌதீக முன்னேற்றம் 87 வீதமாகும்.

இவை தவிர 2015 ஆம் ஆண்டில் முன்னர் குறிப்பிடப்பட்ட அரச நிறுவனங்கள் 05 திணைக்களத்திற்கு உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான ஓய்வூதியச் செயற்பாடுகள் மற்றும் அக்ரஹார காப்புறுதிச் செயற்பாடுகள் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக உரிய கோவைகளைத் தயாரிக்கும் செயற்பாடுகளும் நிறுவனத்திற்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள், நிறுவனத்தின் நிர்வாகக் கட்டமைப்பைத் தயாரித்தல், அரசாங்க சேவை ஆணைக்குழு போன்ற நிறுவனங்களுடனான தொடர்பாடல் ஒருங்கிணைப்பு என்பவற்றை மேற்கொண்டது.

மேற்குறித்த பின்னணியில், பல்வேறு நடைமுறைச் சிக்கல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்த நிலையில் 2083.06 மில்லியன் ரூபா செலவில் 85455 பயனாளிக் குடும்பங்களுக்காக நாடு முழுவதிலும் அபிவிருத்திச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தக் கிடைத்தமை இத்திணைக்களத்திற்குக் கிடைத்த வெற்றியாகும். அதன் மூலம் வாழ்வின் எழுச்சிச் சட்டத்தின 04 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை ஓரளவுக்கேனும் அடைய முடிந்தது. மேலும் எமது நாட்டின் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு வலுவூட்டி, வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தி, அவர்களை வறுமையிலிருந்து விடுவித்து, அவர்களை நாட்டின் பிரதான பொருளாதாரப் போக்கில் செயலூக்கமிக்க நிலையான பங்காளர்களாக உருவாக்கும் உன்னத குறிக்கோளை அடைவதற்காக இத்திணைக்களம் நீண்டதொரு பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.அதனால், எதிர்வரும் வருடங்களில் அக் குறிக்கோளை அடைவதற்காக கணிப்புக்குள்ளாக்கப்பட்ட, அர்ப்பணிப்புள்ள மனித வளமொன்றை உருவாக்கும் நோக்கத்துடன் எதிர்காலத் திட்டடங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

சந்ரா விக்கிரமசிங்க
பணிப்பாளர் நாயகம்
வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம்

## 2. நிர்வாகப் பிரிவின் செயலாற்றுகை

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவு - தாபன, பயிற்சி மற்றும் புலனாய்வு என்பவற்றுடன் தொடர்புடைய கடமைகளை நிறைவேற்றுகின்றது. இந்த பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான கடமை, நிர்வாகத்தின் போது எதிர்கொள்கின்ற நாளாந்த நடவடிக்கைகள் மற்றும் கொள்கைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துதல் என்பனவாகும்.

### 2.1.1. முக்கிய குறிக்கோள்கள்

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் உருவாக்கப்பட்டதிலிருந்து அமைச்சுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விசேட கலந்துரையாடல்கள் மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் கீழ் தரப்பட்டுள்ளன.

- ❖ ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவி உயர்வு நடைமுறையினை நடைமுறைப்படுத்துதல்.
- ❖ ஊழியர் குழாத்தினரின் நல்வாழ்வு, ஒழுக்காற்றை பேணி வருதல், நாளாந்த கடமைகளுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.
- ❖ நிறுவனம் நல்ல நிலையிலிருப்பதை உறுதிப்படுத்துதல்.
- ❖ அலுவலகக் கட்டமைப்பு தயாரித்தல் மற்றும் அலுவலக ஒழுங்கமைப்புக் குறிப்பு தயாரித்தல்.

### 2.1.2. நாளாந்தக் கடமைகள்

- ❖ நாளாந்த கடிதப் பரிமாற்றம் தொடர்பான நடவடிக்கைகள்.
- ❖ பிரிவுகள் மற்றும் பிரிவுசார் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளுதல்.
- ❖ பொது மக்களின் கோரிக்கைகளுக்குப் பதிலளித்தல்.
- ❖ ஊழியர் குழாத்தின் கோரிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்
- ❖ தனிப்பட்ட கோவைகளை பேணி வருதல், இற்றைப்படுத்துதல்.
- ❖ போக்குவரத்து அலகை முகாமை செய்தல்.
- ❖ ஊழியர் சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் பிரயாணச் செலவுகள் மற்றும் அனைத்து கொடுப்பனவுகளுடனும் தொடர்புடைய பட்டியல் கொடுப்பனவுகளைச் செலுத்துவதுடன் தொடர்புடைய செயற்பாடுகள்.
- ❖ ஊழியர்களை சேவையில் இணைப்பதுடன் தொடர்புடைய புள்ளி விபர அறிக்கைகளைப் பேணி வருதல்.
- ❖ மாவட்டங்களுக்கு இடையிலான இடமாற்றச் செயற்பாடுக

### 2.1.3. விசேட ஒப்படைப்புக்கள்,

- ❖ நிர்வாகப் பிரிவுடன் தொடர்புடைய பாராளுமன்ற வினாக்களுக்குப் பதில் வழங்குதல் மற்றும் அமைச்சுக்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு.
- ❖ பொது மனுக் குழுவுடன் தொடர்புடைய கடமைகள்.
- ❖ நிர்வாகப் பிரிவுடன் தொடர்புடைய கணக்காய்வுக் கேள்விகளுக்கான பதில்களைத் தயார்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைப்பு.
- ❖ பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் எழும் விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் மற்றும் அது தொடர்பில் பிரிவுகளின் தலைவர்களுக்கு அறிவித்தல்.
- ❖ வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகள் மற்றும் ஏனைய பதவி உயர்வுப் பரீட்சைகளை நடாத்துதல்/ தொடர்பாடல் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
- ❖ நிலவும் பதவி வெற்றிடங்களைக் கவனத்திற் கொண்டு புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்.

### 2.1.4. பதவியணியினர்

களப் பணியில் ஈடுபட்டுள்ள வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அடங்கலாக வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் மொத்த ஊழியர் எண்ணிக்கை 24,001 ஆகும்.

அட்டவணை - 01 உத்தேச பதவியணி மற்றும் வெற்றிடங்கள்

| பதவி | அனுமதியளிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போது உள்ள எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| **நிர்வாக, அபிவிருத்தி பிரிவின் பதவியணி** | | | |
| பணி□◌பாளர் நாயகம் | 1 | 1 | 0 |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 7 | 1 | 6 |
| பணிப்பாளர் | 19 | 8 | 11 |
| மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளர் | 25 | 25 | 1 |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | 21 | 12 | 9 |
| மாவட்ட வாழ்வின் எழுச்சி பிரதிப் பணிப்பாளர் | 50 | 14 | 36 |

| | | | |
|---|---|---|---|
| தொகுதி வாழ்வின் எழுச்சி உதவிப் □ணிப்பாளர் | 160 | 0 | 160. |
| பிரதேச வாழ்வின் எழுச்சி உதவிப் பணிப்பாளர் | 332. | 0. | 332. |
| நிருவாக உத்தியோகத்தர் | 7 | 2. | 5. |
| சிரேஷ்ட வாழ்வின் எழுச்சி முகாமையாளர் | 205 | 0 | 205 |
| வாழ்வின் எழுச்சி முகாமையாளர் | 2557 | 2399 | 358 |
| வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியேகாத்தர் | 27437 | 20707 | 6730 |
| முகாமைத்துவ உதவியாளர் | 477 | 371 | 106 |
| **உப மொத்தம்** | **31298** | **23540** | **7959** |

**நிதிப் பிரிவின் பதவியணி**

| | | | |
|---|---|---|---|
| பிரதான கணக்காளர் | 7 | 1 | 6 |
| பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் | 1. | 1. | 0 |
| கணக்காளர் | 27 | 19. | 8 |
| உள்ளகக் கணக்காய்வாளர் | 8 | 4. | 4 |
| நிதி உதவியாளர் | 7 | 1. | 6 |
| சிரேஷ்ட உள்ளகக் கணக்காய்வு உத்தியேகாத்தர் | 25 | 0 | 25 |
| உள்ளகக் கணக்காய்வு உத்தியேகாத்தர் | 78 | 77 | 1 |
| உள்ளகக் கணக்காய்வு உதவியாளர் | 128 | 120 | 8 |
| **உப மொத்தம்** | **281** | **223** | **58** |

| **தொழில்நுட்பப் பிரிவின் பதவியணி** | | | |
|---|---|---|---|
| பொறியியலாளர் | 6 | 2 | 4 |
| தொகுதிப் பகுப்பாய்வாளர் | 1 | 1 | 0 |
| மொழிபெயர்ப்பாளர் | 7 | 3 | 4 |
| சட்ட உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| பயிற்சி மற்றும் ஆய்வு உத்தியோகத்தர் | 35 | 10 | 25 |
| ஊடக உத்தியோகத்தர் | 2 | 2 | 0 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 6 | 6 | 0 |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 365 | 0 | 365 |
| **உப மொத்தம்** | **423** | **25** | **398** |

**ஏனைய பதவியணியினர்**

| | | | |
|---|---|---|---|
| சாரதி | 297 | 133 | 164 |
| அலுவலக உதவியாளர் | 441 | 67 | 374 |
| சமையல்காரர் | 8 | 1 | 7 |
| தொழிலாளர் | 16 | 12 | 4 |
| **உப மொத்தம்** | 762 | 213 | 549 |
| **மொத்தக் கூட்டுத்தொகை** | **32764** | **24001** | **8763** |

மூலம் - திணைக்கள மூலங்கள்

## 2.1.5 வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகாத்தர்களின் பெயர்ப் பட்டியல் - 2015

**1. பணிப்பாள் நாயகம்**

1. திரு. ஆர்.ஏ.ஏ.கே. ரணவக, (2014.04.03-2015.01.28)
2. திரு. எச். சுமணபால, (2015.02.25-2015.04.29)
3. திரு. தம்மிக குணவர்தன, (2015.04.30-2015.12.03)
4. திருமதி சந்திரா விக்ரமசிங்ஹ, (2015.12.04 தொடக்கம்…….)

**2.** திரு. ஆர். எச். டபிள்யு.ஏ. குமாரசிரி -மேலதிகப் பணிப்பாளர் நாயகம்

**3. பிரதான கணக்காளர் பதவி :-**

திரு. எஸ்.எம்.எஸ்.ஜீ. ரத்நாயக

**4. பணிப்பாளர் பதவி :-**

1. திரு. சீ.டி. களுஆரச்சி -பணிப்பாளர் (நிர்வாகம்)
2. திருமதி சுனந்தா பியசீலி -பணிப்பாளர் (நுண் நிதி)
3. திரு.ஜே.எம்.எஸ். பண்டார -பணிப்பாளர் (வாழ்வாதாரம்)
4. திரு. அநுர என் வீரரத்ன -பணிப்பாளர் (சமுதாய நிறுவனங்கள்)
5. திருமதி ராஜினீ அதபத்து -பணிப்பாளர் (சமூக அபிவிருத்தி)
6. திரு. ஜே.கே. பத்மசிரி -பணிப்பாளர் (திட்டமிடல்)
7. திருமதி காந்தி திசாநாயக -பணிப்பாளர் (விற்பனை)

**5. கணக்காளர் பதவிகள் :-**

1. திரு.பீ.ஏ.எஸ்.ஜே. குமார
2. திரு. கே.கே.எல். சந்திரதிலக

**6. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் :-**

1. திரு. எம். கே. ரீ. டி கொஸ்த (2014.05.23-2015.08.15)
2. திருமதி ஏ. பீ. கொடிகார (2015.08.16-2015.12.31)

**7.** மாவட்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் பதவி

1. திருமதி. எச்.ஆர்.சிரிநாம - கொழும்பு
2. கே.ஏ.எம்.பெரேரா - கம்பஹா
3. பீ.ஏ.எஸ்.உதயாங்கனி - களுத்துறை
4. டீ.எஸ்.விதானகே - காலி
5. கே.ஏ.எல்.சிரில் - மாத்தறை
6. என்.பீ.ஜே.பீ.ரோஹித - ஹம்பாந்தோட்டை
7. டபிள்யு.எம்.டி.யு.விஜேரத்ன - கண்டி
8. கே.டீ.விக்ரமசூரிய - மாத்தளை

9. ஏச்.எம்.எஸ்.கே.கே.ஹேரத் - நுவரெலியா
10. எச்.எம்.சி.சுசந்த ஹேரத் - இரத்தினபுரி
11. எம்.எஸ்.எம்.பப்ராஸ் - குருநாகல்
12. எஸ்.ஏ.நாலக பிரியசாந்த - புத்தளம்
13. என்.ஆர். ராஜசில்ப - பொலன்னறுவை
14. எம்.சந்திமா - அனுராதபுரம்
15. டபிள்யு.எம்.பி.விஜயபண்டா - பதுளை
16. யு.பி.சந்தருவன் அனுருத்த - அம்பாறை
17. பீ.குணரத்னம் - மட்டக்களப்பு
18. கே.பீ.பிறேமதாச - திருகோணமலை
19. கே.மகேஸ்வரன் - யாழ்ப்பாணம்
20. ஏ.தவபாலன் - கிளநொச்சி
21. கே.சசிரதன் - மன்னார்
22. எஸ்.பத்மரஞ்சன் - வவுனியா
23. ஜே.கணேசமூர்த்தி - முல்லைத்தீவு
24. சிதாரா கமஹே - கேகாலை
25. நீல் பெர்னாந்து - மொனராகலை

**8. பிரதிப் பணிப்பாளர் பதவிகள் :-**

1. திரு. மஹேஷ் பெரேரா
2. திரு. எஸ். லியனாரச்சி
3. திரு. எச். கே. ரணவீர
4. திருமதி ஆர்.எம்.எல்.டபிள்யு.எல் ரத்நாயக
5. திரு. பீ. ஜீ. எல். ஆர். என். எஸ். பண்டார
6. திரு. எஸ். ஆர். விஜேசேகர
7. ஏ. ரீ. ஏ. திரு. ரீ.ஏ. ரணசிங்ஹ
8. திரு. எஸ். வன்னிகம
9. திரு. கபில மாஸகோரள
10. திருமதி எஸ்.டி. கல்யாணி
11. திரு. ரஞ்சித் டி சில்வா
12. திரு. எஸ். பீ. வணிகதுங்க

**9. பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகள் :-**

1. திரு. பீ. ஆர். டி. எச். அநுரவன்ச

**10. உதவிப் பணிப்பாளர் பதவிகள் :-**

1. திரு. ஆனந்த கமகே
2. திருமதி ஐ. டி. என். சஞ்சீவனி

**3.** திரு. ஐ. சீ. ஜே. குணரத்ன

**4.** திரு. பீ. எம். டி. டபிள்யு. டி. பல்லாவல

திரு. பீ.டி. ஆர். கே. பெரேரா

திரு. ஏ. எஃப். பெர்னாண்டோ

**11. பொறியியலாளர் பதவி :-**

1. திரு. ஏ.எல்.எம். மாஹிர்

**12. நிர்வாக உத்தியோகாத்தர் பதவிகள்:-**

1. திரு. பீ.ஜீ. உபுல் ஜயசாந்த
2. திருமதி பி.எல்.எஸ். பொரளுகொட

## 3.பயிற்சி மற்றும் ஆய்வு பிரிவின் செயலாற்றுகை அறிக்கை

கடந்த வருடம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் நிலைமாறல் பருவமாகும்.அதனடிப்படையில் அவ்வருடத்தில் திணைக்களத்தின் கட்டமைப்பில் பல்வேறு மாற்றங்களும் தாபனச் செயற்பாடுகளில் பல்வேறு திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன. உரிய பயிற்சி நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டு நடாத்தப்பட்டு வருவதுடன் ஒரே வருடத்தில் இரண்டு வரவுசெலவுத்திட்டங்களுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 2015 ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலின் பின்னர் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் சமூக வலுவூட்டல், நலனோம்பல் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது.

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தில் பணி புரிகின்ற பல்வேறு பதவிகளை வகிக்கிற்ன உத்தியேகாத்தர்களின் மனப்பாங்குகளையும் திறன்களையும் நேர்மறையான முறையில் விருத்தி செய்து அது தொடர்பில் மிகவும் வினைத்திறன்மிக்கதும் பயனுறுதி வாய்ந்ததுமான சேவைகளை வழங்குவதை நோக்காகக் கொண்டு தேசிய மட்டத்தில் உரிய பயிற்சி நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டன.

அட்டவணை – 02 தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள்

| தொ.இல. | பயிற்சி நிகழ்ச்சி | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பயிற்சியளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் |
|---|---|---|---|
| 01. | நிர்வாக மற்றும் ஒழுக்காற்று விடயங்கள் தொடர்பான பயிற்சி | 01 | 100 |
| 02. | அலுவலக முறைமை மற்றும் நிறுவனச் செயற்பாடுகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | 01 | 100 |
| 03. | ஓய்வூதியம் தயாரித்தல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | 01 | 83 |
| 04. | அரசாங்க உத்தியேகாத்தர் முற்பணக் கணக்குகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | 01 | 02 |
| 05. | பதவிநிலை உத்தியேகாத்தர்களுக்கான ஒழுக்காற்று நடைமுறைகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | 01 | 50 |
| 06. | நிர்வாக மற்றும் ஒழுக்காற்று நடைமுறைகள் தொடர்பான பயிற்சி (தமிழ் மொழி மூலம்) | 01 | 20 |
| 07. | உயர் ஊழியப் பயனுறுதிக்கான அலுவலகப் பயிற்சி | 01 | 09 |
| 08. | சாரதிமாருக்கான வாகன வாயு வெளியேற்ற நிகழ்ச்சி தொடர்பான அறிவூட்டல் செயலமர்வு | 01 | 06 |
| 09 | உத்தியோகத்தர்களின் தற்றுணிபின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட பயிற்சிநெறிகளுக்குக் கட்டணம் செலுத்துதல் (பட்டப்பின் பாடநெறிகள்/கிராமிய அபிவிருத்திப் பட்டப்பின் பாடநெறிகள்) | | 73 |
| | **மொத்தம்** | **08.** | **443.** |

அதனடிப்படையில் இது வரையில் அதிகாரசபை என்ற மனப்பாங்கில் இருந்த உத்தியோகத்தர்கள் திணைக்களமாகியதன் பின்னர் திணைக்கள முறையின் கீழ் பயிற்சி பெறுவதற்காக நிர்வாக மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டதுடன் அரசாங்க சேவையின் சட்ட திட்டங்கள் தொடர்பில் அறிவூட்டப்படுவதன் ஊடாக ஒழுக்கமான ஊழியர் குழாமொன்றை உருவாக்க முடியும் என்றும் சேவையின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

முறையான அலுவலக முறைமைகள் மற்றும் தாபனச் செயற்பாடுகள் தொடர்பான பயிற்சிகளை வழங்குவதன் ஊடாக சிறந்த பணிச் சூழலொன்றை உருவாக்கி முறையானதும் ஒரே தன்மையிலானதுமான சட்டகத்தின் கீழ் தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணக் கோவை என்பவற்றுக்கு இணங்க கடமைகளை நிறைவேற்றுவதற்கான அறிவை வழங்வதே இப்பயிற்சிகளின் குறிக்கோளாகும்.

பெருந்தொகையான ஊழியர்களின் ஓய்வூதியக் கோவைகளைத் தயாரிக்கும் போது ஏற்படும் தவறுகளைக் குறைப்பதற்காக ஓய்வூதியக் கோவையொன்றைத் தயாரிப்பதன் முதற் படிமுறையிலிருந்து இறுதிப் படிமுறை வரையும் ஒழுங்கமைக்கப்பட்ட பயிற்சியை வழங்குவதன் மூலம் ஏற்கனவே தமது விருப்பத்தின் அடிப்படையில் தெரிவு செய்ததன் தெரிவுகளில் கோவைகளுக்கு ஏற்படுகின்ற பிழைகளைக் குறைத்து அதனூடாக துரிதமானதும் திருப்திகரமானதுமான சேவையினை உத்தியோத்தர்களுக்கு வழங்குதல்.

கணக்கீட்டுச் செயற்பாடுகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துகின்ற போது நிதி முகாமையைப் பேணி வருவது தொடர்பில் உத்தியோகத்தர்களின் அறிவை விருத்தி செய்வது குறிக்கோளாக உள்ளது. அதுவும் தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட ஒரு பயிற்சி நிகழ்ச்சியாகும்.

அலுவலக உதவியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததன் மூலம் குழு உணர்வுடன் வேலை செய்வதும் அதன் மூலம் சிறந்த வினைத்திறன்மிக்க சேவையொன்றை வழங்குவதும் அவற்றின் ஊடாக உயர்ந்தளவிலான பயனுறுதித் தன்மையை ஏற்படுத்துவதும் நோக்காகக் கொள்ளப்பட்டது.

பதவிநிலை உத்தியோகத்தர்களின் பயிற்சிகளின் அடிப்படையில் நவீனமயப்படுத்தலை முன்னுரிமைக் குறிக்கோளாகக் கொண்டு அவர்களுக்கான நடைமுறைச் செயலொழுங்கு தொடர்பான பயிற்சி நடாத்தப்பட்டது. அதன் மூலம்

மனித வளங்களைச் சிறந்த முறையில் முகாமை செய்து சிறந்த பணிச் சூழலொன்றை உருவாக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், வாகனப் பராமரிப்புக்காக மிகவும் வினைத்திறன்மிக்கதும் பயனுறுதி வாய்ந்ததுமான சேவையினைப் பெறுவதை நோக்காகக் கொண்டு நிறுவனத்தின் சாரதிமார்களுக்கான வாயு வெளியேற்ற நிகழ்ச்சி தொடர்பில் அறிவூட்டப்பட்டது. இப்பயிற்சிச் செயமர்வின் ஊடாக கவனம் செலுத்தப்படாத ஒரு குழு தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன் அதற்கு அவர்களின் வரவேற்பும் கிடைத்தது.

இந்த தேசிய மட்டத்திலான பயிற்சி நிகழ்ச்சியை நடைமுறைப்படுத்துவதற்காக வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்திடம் பின்வரும் பயிற்சி நிலையங்கள் காணப்படுகின்றன.

1. நில்லம்ப பயிற்சி
2. சமனலவெவ பயிற்சி நிலையம்
3. மாத்தறை பயிற்சி நிலையம்

2015 ஆம் ஆண்டில் பின்வரும் பயிற்சி நிகழ்ச்சிகள் மேற்குறித்த நிலையங்களில் நடாத்தப்பட்டன.

அட்டவணை **-03 பயிற்சி நிலையங்களில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள் 2015**

| தொ.இ | பயிற்சி நிகழ்ச்சி | நிகழ்ச்சிகளின் எ.கை | நடாத்தப்பட்ட இடம் | பங்குபற்றியோர் எ.கை |
|---|---|---|---|---|
| 1 | உள்ளகக் கணக்காய்வு உதவி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி | 01 | சமனலவெவ பயிற்சி நிலையம் | 40 |
| 2 | 1. அலுவலக முறைமைகள் மற்றும் அலுவலக முகாமைப் பயிற்சி<br>2. அரசாங்க நிதி முகாமை பயிற்சி | 02 | மாத்தறை மாவட்ட பயிற்சி நிலையம் | 100 |
| 3 | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களுக்கான அறிவூட்டற் செயலமர்வு மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் | 01 | சமனலவெவ பயிற்சி நிலையம் | 180 |
| 4 | கண்டி மாவட்ட வாழ்வின் எழுச்சி ஊழியர்களுக்கான அலுவலக முறைமைகள் மற்றும் தாபனச் | 02 | நில்லம்ப மாவட்டப் பயற்சி நிலையம் | 114 |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயற்பா தொடர்பான வதிவிடப் பயிற்சி | | | |
| | **மொத்தம்** | **06** | | **434** |

மாத்தறை பயிற்சி நிலையத்தில் வதிவிடப் பயிற்சிக்கான வசதிகள் இல்லாத அதேவேளை நில்லம்ப மற்றும் சமனலவெவ பயிற்சி நிலையங்கள் வதிவிடப் பயிற்சி வசதிகளைக் கொண்டுள்ளன. அரசாங்க உத்தியோகத்தர்களை அதிக வேலைப்பளுவிலிருந்து மீட்டு ஆரோக்கியமான சூழலொன்றில் பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் செய்வதன் மூலம் பயனுறுதி வாய்ந்த பயிற்சிகளை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

இலங்கை ஒரு பல்லின நாடு என்ற வகையில் தமிழ் மொழியில் சேவையாற்றுபவர்களுக்காக அவர்களுடைய தாய் மொழியில் பயிற்சி நிகழ்ச்சியொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் மூலம் சிறந்த சேவையினை எதிர்பார்க்க முடியும்.
இவை தவிர, மாவட்ட மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதுடன் இப்பயிற்சிகள் அனைத்தினதும் குறிக்கோள் பதவியணியினரின் அறிவு, மனப்பாங்கு, திறன் என்பவற்றை விருத்தி செய்வதாகும்.
பின்வரும் பயிற்சி நிகழ்ச்சிகள் கடந்த வருடத்தில் மாவட்டங்களில் நடாத்தப்பட்டன.

அட்டவணை-04 மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி

| **தொ** | **மாவட்டம்** | **பயிற்சி நிகழ்ச்சி** | **நிகழ்ச்சி களின் எ.கை** | **பங்குபற்றி யோர் எ.கை** |
|---|---|---|---|---|
| 01. | கொழும்பு | உள்ளக ஊழியர் குழாத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டுவதற்கான நிகழ்ச்சி | 13 | 863 |
| 02. | கிளிநொச்சி | உள்ளகக் கணக்காய்வு ஊழியர்களுக்கான விடய அறிவுப் பயிற்சிகளை வழங்குதல்<br>1. தாபன முறைமைகள் தொடர்பான பயிற்சி (02 நாட்கள்) 2.முகாமையாளர்களுக்கான மனப்பாங்கு விருத்திப் பயிற்சி | 02 | 62<br>75 |
| 03. | கிளிநொச்சி | மாவட்ட உள்ளக ஊழியர் குழாத்தினருக்கான விடய அறிவுப் பயிற்சி<br>1. ஒழுக்காற்று நடவடிக்கை முகாமை - 40 உத்தியோகத்தர்கள் 2. அரசாங்க கணக்கீட்டு பயிற்சி - 40 உத்தியோகத்தர்கள் | 03 | 120 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 3.அரசாங்க கணக்கீட்டு முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு முறை தொடர்பான பயிற்சி, சமூக அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சி - 40 உத்தியோகத்தர்கள் | | |
| 04. | கம்பஹா | ஊழியர் குழாத்திற்கான<br>தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்கள் தொடர்பான பயிற்சி (02 நாட்கள்) | 03 | 318 |
| 05. | காலி | உள்ளக பதவியணியினர்<br>1. அலுவலக முறைமைகள் மற்றும் தாபனச் செயற்பாடுகள்<br>2. போதைப் பொருள் நிவாரணம், மகிழ்ச்சியான குடும்பம், உணவுப் பாதுகாப்பு) | 02 | 200 |
| 06. | இரத்தினபுரி | வாழ்வின் எழுச்சி ஊழியர் குழாத்திற்கான கணக்கீட்டுச் செயன்முறை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | 01 | 40 |
| 07. | குருநாகல் | ஊழியர் குழாத்திற்கான<br>( 1.தாபன, ஒழுக்காற்று மற்றும் அலுவலச் செயற்பாடுகள் தொடர்பான ஒரு நாள் பயிற்சி (05 செயலமர்வுகள்)<br>**2.** தாபன மற்றும் ஒழுக்காற்றுச் செயற்பாடுகள் தொடர்பான ஒரு நாள் செயலமர்வு<br>3. கணக்கீடு (சிகாஸ்) தொடர்பான ஒரு நாள் பயிற்சி<br>4. ஓய்வூதியம் தயாரித்தல் தொடர்பான ஒரு நாள் பயிற்சி) | 08 | 475 |
| 08. | கேகாலை | ஊழியர் குழாத்திற்கான<br>1. ஒழுக்காற்றுச் செயற்பாட்டு முகாமைப் பயிற்சி<br>2. பொருட் தொகை மதிப்பாய்வு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி<br>3. அரசாங்க கணக்கீட்டு முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு முறை தொடர்பான பயிற்சி | 03 | 180 |
| 09. | கண்டி | மாவட்டத்திலுள்ள தொளுவை பிரதேச செயலகத்தில் மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் பயிற்சி | 01 | 55 |
| 10. | கண்டி | ஊழியர் குழாத்திற்கான<br>1.திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான | 02 | 127 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஓய்வூதியங்களைச் செலுத்துவதற்கான அடிப்படை அம்சங்கள் தொடர்பில் அறிவூட்டல்<br>2.திணைக்கள உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகளை உரிய முறையில் தயாரித்தல் | | |
| 11. | பதுளை | ஊழியர் குழாத்திற்கான<br>1. வாழ்வின் எழுச்சி வலய முகாமையாளர்களுக்கான அலுவலக முறைமைகள் மற்றும் தாபனச் செயற்பாடுகள் தொடர்பான செயலமர்வு (01 நாள்)<br>2. வாழ்வின் எழுச்சி சமுதாய வங்கிகளின் ஊழியர் குழாத்தினருக்கான மனப்பாங்கு விருத்தி மற்றும் தாபனப் பயனுறுதி தொடர்பான பயிற்சிநெறி (03 நாட்கள்) -<br>3. வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பதிவு செய்துள்ளமை மற்றும் தனிப்பட்ட கோவைகளைப் பேணி வருதல் தொடர்பான பயிற்சிநெறி - | 03 | 468 |
| 12. | பதுளை | மாவட்ட வாழ்வின் எழுச்சி முகாமையாளர்களுக்கான அனர்த்த முகாமைப் பயிற்சி நிகழ்ச்சி | 01 | 100 |
| 13. | அம்பாந்தோட்டை | ஊழியர் குழாத்திற்கான<br>(இலங்கையில் அரசாங்கத் துறை, தாபன விதிக்கோவை ஏற்பாடுகள், அலுவலக முகாமை மற்றும் கோவைப்படுத்தல், நிதிப் பிரமாணங்கள் தொடர்பான அறிவூட்டல்) | 04 | 225 |
| 14. | அம்பாறை | மஹஓயா பிரதேச செயகத்தின் வாழ்வின் எழுச்சி ஊழியர் குழாத்திற்கான திறன் விருத்தி நிகழ்ச்சி | 01 | 34 |
| 15. | அம்பாறை | தெஹியத்தகண்டிய பிரதேச செயகத்தின் கள உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டுவதற்கான நிகழ்ச்சி | 01 | 100 |
| 16. | அநுராதபுரம் | உள்ளக ஊழியர் குழாத்தினருக்கான விடய அறிவுப் பயிற்சி<br>1. அலுவலக முறைமைகள் மற்றும் தாபனச் செயற்பாடுகள் தொடர்பான பயிற்சி (மூன்று நாள்) - 2 நிகழ்ச்சிகள் - 140 உத்தியோகத்தர்கள் | 04 | 280 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2. புதிய கணக்கீட்டு முறை தொடர்பான ஒரு நாள் பயிற்சி -<br>2.நிகழ்ச்சிகள் - 140 உத்தியோகத்தர்கள் | | |
| 17. | பொலனறு வை | உள்ளக ஊழியர் குழாத்தினருக்கான விடய அறிவுப் பயிற்சி வழங்கல்<br>(1. தாபன விடய உத்தியோகத்தர்களுக்கான தாபனச் செயற்பாட்டுப் பயிற்சி நிகழ்ச்சி<br>2. செயற்திட்ட அறிக்கை தயாரித்தல் தொடர்பான அடிப்படைப் பயிற்சி நிகழ்ச்சி<br>3. போலி நாணயத் தாள்க் தொடர்பான அறிவூட்டல் மற்றும் இணைய வசதிகள், மின்னஞ்சல் தொடர்பான அறிவூட்டல் நிகழ்ச்சி) | 03 | 189 |
| | | **மொத்தம்** | **55** | **3911** |

மூலம் - திணைக்கள மூலங்கள்

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்திடம் காணப்படும் விசேட வளம், பல்வேறு ஆற்றல்களையுடைய மனித வளமாகும். அந்த மனித வளத்தை உரிய முறையில் முகாமை செய்து அவர்களை அறிவும் ஆற்றலும் நிரம்பிய சிறந்த மனப்பாங்குகளைக் கொண்ட ஊழியர் குழாமொன்றாக உருவாக்குவதன் மூலம் வெற்றிகரமான இலக்குகளை நோக்கி அவர்களை வழிநடாத்தி ஒட்டுமொத்த திணைக்களமும் சவால்களை உறுதியுடன் எதிர்கொண்டு சிரமங்களின்றி இலக்குகளை அடைவதற்கு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிற்சிப் பிரிவு எதிர்காலத்திலும் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகின்றேன். 2016 ஆம் ஆண்டில் சர்வதேச மட்டத்திலான பயிற்சிச் செயலமர்வுகளையும் நடாத்தக் கூடிய விதத்தில் இந்த நிலையத்தை மேம்படுத்தும் இலக்கு எம் முன்னால் உள்ள சவாலாகும்.

## 4.புலனாய்வுப் பிரிவின் செயலாற்றுகை அறிக்கை

**குறிக்கோள்கள் :-** சட்டத்தை மதிக்கும் ஒழுக்கமுள்ள பதவியணியொன்றை உருவாக்குவதன் ஊடாக வினைத்திறன்மிக்கதும் பயனுறுதி வாய்ந்ததுமான சேவைகளை வழங்குவதன் ஊடாக ஊழல், மோசடிகளின்றிய முன்மாதிரி திணைக்களமொன்றை உருவாக்குதல்.

**கடமைகள் :-** நிறுவனத்தினுள் பணி புரிகின்ற அனைத்து உத்தியோகத்தர்களாலும் செய்யப்படும் கடமைத் தட்டிக்கழிப்புக்கள், முறைகேடுகள், குற்றச் செயல்கள் என்பவற்றுடன் தொடர்புடையதாகக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில்

01. ஆரம்ப விசாரணைகளை மேற்கொள்ளுதல்.
02. குற்றப்பத்திரங்கள் அனுப்புதல் அல்லது விளக்கங்கள் கோருதல்
03. முறையான ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துதல்.
04. ஒழுக்காற்றுக் கட்டளைகள் வழங்குதல்.
05. மேன்முறையீடுகள் தொடர்பான தேவையான நடவடிக்கை எடுத்தல்.

1. 2015 ஆம் ஆண்டிற்கான முறையான ஒழுக்காற்று விசாரணை அறிக்கைகள் - 14
2. 2015 ஆம் ஆண்டிற்கான முறையான ஒழுக்காற்று விசாரணைகளுக்கான கட்டளைகள் -17
3. 2015 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய ஆரம்ப விசாரணை/ உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் -32
4. 2015 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட குற்றப் பத்திரங்கள் 03
5. 2015 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட பணி இடைநிறுத்தங்கள் 01
6. 2015 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய ஒழுக்காற்று விசாரணைகளுக்கு உட்பட்ட வகையில் மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளல் - 12
7. 2015 ஆம் ஆண்டில் சேவையைக் கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்கள் மற்றும் வேறு விடயங்கள் தொடர்பில் மேன்முறையீட்டுச் சபையின் சிபாரிசுகளின் அடிப்படையில் பின்வருமாறு தீர்மானங்கள் எடுத்தல் - 81
   - தண்டனைகளுடன் மீண்டும் சேவையை வழங்குதல் - 22
   - தண்டனைகளை இலகுபடுத்துதல் -
   - நிராகரித்தல் - 59
   - ஒழுக்காற்றுக் கட்டளைகளுக்கு எதிராக அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்ட மேன்முறையீடுகள் - 02

**விசேட அம்சங்கள் :-**

2015 பெப்ரவரி மாதத்தில் திணைக்களத்தின் தலைமையகம் பொரளையிலிருந்து செத்சிரிபாய வளாகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதன் பின்னர் விசாரணைப் பிரிவுக்கான அலுவலகமொன்றைத் தேடுவதற்குப் பல மாதங்கள் எடுத்தன. அது வரையில் கோவைகள் பொரளை அலுவலகத்தில் காணப்பட்டமை, பிரிவின் மேற்பார்வைச் செயற்பாடுகளைச் செய்து வந்த திருமதி அனோமா ஜயந்தி அவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றமை, புலனாய்வுப் பிரிவில் முழு நேர மேற்பார்வையை மேற்கொள்வதற்குப் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் காணப்படாமை என்பவற்றின் காரணமாக 2015 ஆம் ஆண்டில் புலனாய்வுப் பிரிவின் செயலாற்றுகை எதிர்பார்த்த மட்டத்தை விடக் குறைவாகக் காணப்பட்டது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

ஐ.சீ.ஜே. குணரத்ன,
உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)

## வருடாந்த அபிவிருத்தி நிகழ்ச்சியின் முன்னேற்றம் - (2015.12.31 திகதி)

| தொ. இ | நிகழ்ச்சி | ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.மி) | அனுமதி நிகழ்ச்சியின் எ.கை | மூலதன முன்னேற்றம் | | பௌதீக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | செலவு | முன்னேற்றம் | உரிய நிகழ்ச்சி | வீதம் |
| 01 | வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சி | 1015.00 | 49585 | 847.24 | 83.47 | 43923 | 88.58 |
| 02 | சமூக அபிவிருத்தி | 60.00 | 15448 | 57.87 | 96.45 | 10532 | 68.18 |
| 03 | விற்பனை மேம்படுத்தல் | 50.00 | 1864 | 25.39 | 50.78 | 846 | 45.39 |
| 04 | சமுதாய அபிவிருத்தி | 17.00 | 653 | 3.75 | 22.06 | 125 | 19.14 |
| 05 | தகவல் தொடர்பாடல் | 30.00 | 03 | 30.00 | 100 | 03 | 100 |
| 06 | ஊடக நிகழ்ச்சி | 4.00 | 03 | | | | |
| 07 | சமூக நலன்புரி | 24.00 | 01 | 24.00 | 100 | 01 | 100 |
| | உப மொத்தம் | 1200.00 | 67557 | 988.25 | 82.35 | 55430 | 82.05 |
| அமைச்சின் ஒதுக்கீடு | | | | | | | |
| 08 | வாழ்வாதார அபிவிருத்தி | 688.80 | 30211 | 576.28 | 83.66 | 21.044 | 69.00 |
| 09 | வாழ்வாதார மேம்படுத்தல் கடன் | 477.00 | 10402 | 471.43 | 98.83 | 8353 | 80.30 |
| 10 | திரிய பியச வீட்டுத் திட்டம் | 187.80 | 2504 | 47.10 | 25.08 | 628 | 25.08 |
| | உப மொத்தம் | 1353.60 | 43117 | 1094.81 | 80.88 | 30.025 | 69.64 |
| | முழுத்தொகை | 2553.60 | 110674 | 2083.06 | 81.57 | 85455 | 77.21 |
| | ஏனைய நிகழ்ச்சி | | | | | | |
| 11 | பயிற்சி நிகழ்ச்சி | 8.00 | 67 | 6.31 | 78.89 | 58 | 86.57 |
| 12 | சமூர்த்தி உதவி | 41.760 | 01 | 40209.74 | 96.29 | 01 | 100 |
| 13 | சமுதாய வங்கி நிகழ்ச்சி(1998-2015) | - | - | 153,990 கடன் தொகை | - | 6,851,459 கடன் எ.கை | - |
| 14 | சமூக பாதுகாப்பு நிகழ்ச்சி | - | - | 638.11 ரூ. | - | 275,024 பயனாளிகள் | - |

## 5 .சமூக நலன்புரிப் பிரிவின் பணி

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பொருளாதார மட்டம் வறுமைக் கோட்டுக்கு கீழ் செல்லாத விதத்தில் நிலையாக வைத்திருப்பதுடன் அவர்களுக்குச் சமூக பொருளாதார ரீதியில் வலுவூட்டுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவது சமூக நலன்புரிப் பிரிவின் அடிப்படைப் பணியாகும்.

### சமுர்த்தி நிகழ்ச்சி

1995 ஆம் ஆண்டில் சமுர்த்தி நிவாரண நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட பெரும்பாலான நிவாரண நிகழ்ச்சித்திட்டங்களின் அடிப்படைக் குறிக்கோள் சமூக நலனோம்பலாகக் காணப்பட்டது. எனினும் சமுர்த்தி நிவாரண நிகழ்ச்சித்திட்டம் மூன்று வகையான அபிவிருத்தி அணுகுமுறைகளின் ஊடாக வறுமையை ஒழிப்பதை இலக்காகக் கொண்டு முழு நாட்டையும் உள்ளடக்கிய விதத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.




சமுர்த்தி நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய பண்பு அது நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு அபிவிருத்தியை நோக்கி நடைமுறைப்படுத்தப்படவதாகும். அதனால், சமூகத்திலுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் ஆகக் குறைந்த வாழ்க்கைத் தரத்தைப் பேணி வருவதற்காக சிறிதளவு நிதி உதவி வழங்கப்படுவதுடன், அவர்களின் குடும்பங்களின் வருமான மட்டத்தை மேம்படுத்துவதற்காக முழு நாட்டினதும் பொருளாதாரச் செயற்பாடுகளை பயனுறுதி வாய்ந்த முறையில் ஒருங்கிணைப்பதற்கும் ஊக்குவிப்பதற்குமான உபாயமாக இதனை அறிமுகப்படுத்த முடியும்.

1995 ஆம் ஆண்டு முதல் சமுர்த்தி உதவிகள் கொடுப்பனவு அட்டைகளாக வழங்கப்பட்ட போதிலும் 2012 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் அதுவரையில் வழங்கப்பட்டு வந்த சமுர்த்தி உதவிகளை சமுர்த்தி வங்கிச் சங்கங்களின் ஊடாகப் பயனாளிகளுக்கு வழங்கும் செயற்பாடு

ஆரம்பிக்கப்பட்டது. சமுர்திப் பயனாளிகளிடம் சேமிக்கும் பழக்கத்தையும் அதன் மூலம் முதலீடு செய்வதற்கான ஊக்குவிப்பை வழங்குவதே இதன் குறிக்கோளாகும்.

2015 ஆம் ஆண்டின் சமுர்திப் பயனாளிகளின் எண்ணிக்கை 1,453,078 ஆகக் காணப்பட்டதுடன் அதற்காக 40.2 பில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

கடந்த 05 வருடங்களில் சமுர்தி நிவாரணம் பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை (2011-2015)

| ஆண்டு | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2011. | 15,41,318. |
| 2012. | 15,16,543. |
| 2013. | 14,77,173. |
| 2014. | 14,79,811. |
| 2015. | 14,53,078. |

கடந்த 05 வருடங்களில் சமூர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை (2011-2015)



கடந்த 05 வருடங்களில் சமுர்தி நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தின் செலவு (2011-2015)

| ஆண்டு | செலவு ரூபா |
| --- | --- |
| 2011. | 9,04,34,42,154.63. |
| 2012. | 10,55,31,88,655.62. |
| 2013. | 15,25,59,79,958.73. |
| 2014. | 15,04,17,99,341.62. |
| 2015. | 40,20,97,36,640.00. |

கடந்த 05 வருடங்களில் சமூர்த்தி உதவி நிகழ்ச்சியின் செலவு (2011-2015)



2015 ஆம் ஆண்டின் நிவாரண நிகழ்ச்சியின் கொடுப்பனவுகள் பகிரப்பட்ட விதம்

| குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை | நிவாரணத்தின் பெறுமதி ரூபா | கட்டாயச் சேமிப்பு ரூபா. | சமூக பாதுகாப்பு ரூபா. | வீடமைப்பு லொத்தர் ரூபா. | பயனாளிக்கு கிடைக்கும் தொகை ரூபா. |
|---|---|---|---|---|---|
| 04 அல்லது 04 க்கு மேற்பட்ட | 3500/- | 300/- | 45/- | 10/- | 3145/- |
| 03. | 2500/- | 200/- | 45/- | 10/- | 2245/- |
| 03 க்கு குறைந்த | 1500/- | 100/- | 45/- | 10/- | 1345/- |
| வலுவூட்டப்பட்ட குடும்பங்கள் | 420/- | 365/- | 45/- | 10/- | - |

### 5..1 கட்டாயச் சேமிப்பு ரூபா:-

சமுர்திப் பயனாளிடம் சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு பயனாளியிடமிருந்து கட்டாயச் சேமிப்புக்கான பங்களிப்பு பெறப்படுவதுடன், ஏதேனும் முதலீட்டுத் தேவையின் போது, திடீர் நோய்களின் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்ற போது, உயர் கல்வித் தேவையின் போது கட்டாயச் சேமிப்புப் பணத்தை மீளப் பெற முடியும்.

### 5.2 சமூகப் பாதுகாப்பு:-

சமுர்திப் பயனாளிக் குடும்பமொன்றில் நிகழும் மரணம், திருமணம், வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுதல், பிள்ளை பிறத்தல், குடும்பம் பொருளாதார மட்டத்தில் கீழ் மட்டத்தில் விழுவதைத் தடுத்தல் என்பவற்றுக்கு உதவி வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒவ்வொரு பயனாளியும் பங்களிப்புச் செய்வது அவசியமாகும்.

### 5.3 வீடமைப்பு லொத்தர்:-

பயனாளிக் குடும்பங்களின் வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் ஒவ்வொரு பயனாளியினதும் பங்களிப்புத் தொகையின் மூலம் கட்டியெழுப்பப்படும் வீடமைப்பு நிதியமாகும்.

## 5.4 சமூர்த்தி பயனாளிகள் தொடர்பான புள்ளிவிபரம்

சமூர்த்தி உதவியினைப் பெறும் பயனாளிகளை அறிந்து கொள்வதற்காக இலங்கை முழுவதும் புள்ளிவிபரம் மேற்கொள்ள 2015 ஆம் ஆண்டு முதல் காலகட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதுடன், அதற்காக 25 இலட்சம் புள்ளிவிபர பரிசித்தல் பத்திரிகை அச்சிடுவதற்காக ரூ.மி.24 செலவிடப்பட்டுள்ளது. மேலும் ஆண்டு இறுதியில் 1,455,078 பத்திரிகை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

## 5.5 பயனாளிக்கு கிடைக்கும் தொகை ரூபா:-

சமுர்தி வங்கியின் ஊடாகப் பயனாளிக்கு கிடைக்கும் பணத்தின் மூலம் உணவு மற்றும் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தான் விரும்பும் எந்தவொரு நிலையத்திலும் பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அந்த உதவு தொகைகள் தலைமையகத்திலிருந்து மாவட்ட செயலகங்களுக்கு வழங்குவதற்கும் பின்னர் உரிய பிரதேச செயலகத்திற்கு வழங்குவதற்கூம் அதனூடாக சமுர்தி வங்கியில் வைப்புச் செய்து பயனாளிகளின் கணக்குகளில் வைப்புச் செய்வதற்கு நீண்ட காலம் எடுக்கின்றது. அதனால் 2015 ஆம் ஆண்டு முதல் பயனாளியின் கணக்கு உள்ள வங்கி வலயத்தின் சமுர்தி வங்கிக்கு, தலைமையகத்திலிருந்து நேரடியாக வைப்புச் செய்வதன் ஊடாக அத் தொகையினைப் பயனாளியின் கணக்கில் வைப்புச் செய்யும் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் குறுகிய காலத்தில் பயனாளிக்குரிய பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது.

<u>2015 ஆம் ஆண்டில் சமுர்திப் பயனாளிகளின் எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில்</u>

| மாவட்டம் | ரூபா.420 | ரூபா.1500 | ரூபா.2500 | ரூபா.2500 | பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 1,268. | 21,945. | 9,339. | 17,012. | 49,564. |
| கம்பஹா | 7,349. | 41,593. | 22,260. | 45,417. | 1,16,619. |
| களுத்துறை | 6,063. | 23,711. | 10,995. | 21,804. | 62,573. |
| கண்டி | 7,409. | 30,972. | 15,071. | 33,807. | 87,259. |
| மாத்தளை | 3,087. | 15,803. | 7,862. | 14,965. | 41,717. |
| நுவரெலியா | 8,065. | 12,419. | 6,031. | 13,126. | 39,641. |
| காலி | 7,893. | 20,246. | 11,806. | 31,254. | 71,199. |
| மாத்தறை | 4,527. | 23,227. | 11,137. | 26,399. | 65,290. |
| அம்பாந்தோட்டை | 6,397. | 14,660. | 9,772. | 23,952. | 54,781. |
| யாழ்ப்பாணம் | 0. | 13,418. | 9,205. | 31,283. | 53,906. |
| மன்னார் | 0. | 3,020. | 2,307. | 7,839. | 13,166. |
| வவுனியா | 2,759. | 2,822. | 1,599. | 4,829. | 12,009. |
| முல்லைத்தீவு | 44. | 1,926. | 2,614. | 6,530. | 11,114. |
| கிளிநொச்சி | 0. | 2,716. | 2,050. | 6,968. | 11,734. |
| மட்டக்களப்பு | 16,502. | 19,764. | 10,269. | 32,677. | 79,212. |
| அம்பாறை | 13,960. | 20,742. | 10,404. | 29,336. | 74,442. |
| திருகோணமலை | 7,330. | 10,218. | 5,899. | 15,602. | 39,049. |
| குருநாகல் | 8,555. | 51,155. | 27,581. | 58,440. | 1,45,731. |
| புத்தளம் | 1,559. | 22,123. | 9,446. | 20,959. | 54,087. |
| அநுராதபுரம் | 5,245. | 23,020. | 11,507. | 22,050. | 61,822. |
| பொலனறுவை | 4,304. | 7,691. | 5,781. | 11,241. | 29,017. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பதுளை | 6,087. | 18,608. | 9,699. | 22,126. | 56,520. |
| மொனராகலை | 7,306. | 12,656. | 8,045. | 18,677. | 46,684. |
| இரத்தினபுரி | 11,504. | 25,974. | 20,698. | 51,572. | 1,09,748. |
| கேகாலை | 8,382. | 19,214. | 11,869. | 26,729. | 66,194. |
| மொத்தம் | 1,45,595. | 4,59,643. | 2,53,246. | 5,94,594. | 14,53,078. |

- 2015 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் சமுர்தி நிவாரணத்திற்காக மாவட்ட மட்டத்தில் ஒதுக்கீடுகள் பகிரப்பட்ட விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| மாவட்டம் | தை | மாசி | பங்குனி | சித்திரை | வைகாசி | ஆனி | ஆடி | ஆவணி | புரட்டாதி | ஐப்பசி | கார்த்திகை | மார்கழி | முழு ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 97,171,780 | 97,171,780 | 97,171,780 | 119,457,680 | 119,457,680 | 117,153,380 | 117,292,820 | 117,111,740 | 116,934,660 | 116,727,740 | 116,548,980 | 116,339,560 | 1,348,539,580 |
| கம்பஹா | 118,007,060 | 118,007,060 | 118,007,060 | 285,178,380 | 285,178,380 | 283,424,460 | 283,153,820 | 282,156,020 | 281,824,800 | 281,239,420 | 280,748,000 | 280,085,580 | 2,897,010,040 |
| களுத்துறை | 231,079,200 | 231,079,200 | 231,079,200 | 144,658,120 | 144,658,120 | 144,276,520 | 144,040,000 | 143,834,400 | 143,582,980 | 143,353,140 | 142,969,020 | 141,914,460 | 1,986,524,360 |
| கண்டி | 140,939,580 | 140,939,580 | 140,939,580 | 211,633,220 | 211,633,220 | 211,050,600 | 210,352,840 | 210,062,620 | 208,803,740 | 208,427,480 | 206,614,880 | 205,571,780 | 2,306,969,120 |
| மாத்தளை | 145,204,000 | 145,204,000 | 145,204,000 | 99,193,360 | 99,193,360 | 99,163,020 | 98,793,420 | 98,543,320 | 98,209,360 | 97,820,640 | 97,394,700 | 97,033,540 | 1,320,956,720 |
| நுவரெலியா | 231,027,640 | 231,357,360 | 231,357,360 | 83,386,620 | 83,386,620 | 83,275,380 | 83,217,380 | 83,156,780 | 83,087,020 | 83,057,520 | 83,033,460 | 83,034,300 | 1,442,377,440 |
| காலி | 294,200,580 | 294,200,580 | 294,200,580 | 176,766,820 | 176,766,820 | 175,403,960 | 175,218,660 | 174,964,640 | 174,575,400 | 173,983,440 | 173,360,740 | 172,588,060 | 2,456,230,280 |
| மாத்தறை | 105,445,940 | 105,445,940 | 105,445,940 | 163,206,660 | 163,206,660 | 162,526,820 | 162,154,360 | 161,576,760 | 161,094,700 | 160,576,220 | 159,563,580 | 156,980,840 | 1,767,224,420 |
| ஹம்பாந்தோட்டை | 131,868,760 | 131,868,760 | 131,868,760 | 133,759,300 | 133,759,300 | 133,711,980 | 133,613,320 | 133,492,740 | 133,332,260 | 132,493,380 | 133,112,920 | 132,938,740 | 1,595,820,220 |
| யாழ்ப்பாணம் | 172,264,560 | 172,264,560 | 172,264,560 | 152,633,500 | 152,633,500 | 152,633,500 | 152,633,500 | 152,633,500 | 152,633,500 | 152,633,500 | 152,633,500 | 152,630,000 | 1,890,491,680 |
| மன்னார் | 81,127,020 | 81,127,020 | 79,835,720 | 37,839,000 | 37,839,000 | 37,874,000 | 37,918,000 | 37,894,000 | 37,894,000 | 37,793,000 | 37,776,000 | 37,734,000 | 582,650,760 |
| வவுனியா | 81,028,520 | 81,028,520 | 81,028,520 | 26,254,280 | 26,254,280 | 26,272,280 | 26,289,280 | 26,281,280 | 26,286,280 | 26,284,780 | 26,288,780 | 26,290,780 | 479,587,580 |
| முல்லைத்தீவு | 108,788,200 | 108,788,200 | 108,788,200 | 32,192,480 | 32,192,480 | 32,214,980 | 32,134,480 | 32,134,480 | 32,134,480 | 32,160,480 | 32,183,480 | 32,297,480 | 616,009,420 |
| கிளிநொச்சி | 109,844,080 | 109,844,080 | 109,844,080 | 33,518,500 | 33,518,500 | 33,518,500 | 33,535,500 | 33,564,500 | 33,564,500 | 33,566,500 | 33,564,500 | 33,587,000 | 631,470,240 |
| மட்டக்களப்பு | 145,440,360 | 145,440,360 | 145,440,360 | 178,915,940 | 178,915,940 | 177,678,040 | 177,571,200 | 177,454,660 | 177,090,520 | 176,967,280 | 176,843,380 | 176,618,840 | 2,034,376,880 |
| அம்பாறை | 89,722,300 | 89,722,300 | 89,722,300 | 167,475,040 | 167,475,040 | 166,885,560 | 167,105,860 | 166,564,540 | 166,536,220 | 166,355,260 | 166,026,500 | 165,662,200 | 1,769,253,120 |
| திருகோணமலை | 115,746,100 | 115,746,100 | 115,746,100 | 87,689,560 | 87,689,560 | 87,699,060 | 87,781,480 | 87,787,800 | 87,785,080 | 87,791,780 | 87,769,660 | 87,760,100 | 1,136,992,380 |
| குருநாகல் | 55,921,640 | 55,921,640 | 55,921,640 | 361,475,500 | 361,475,500 | 361,063,200 | 359,751,200 | 358,793,000 | 357,567,360 | 357,019,860 | 355,267,660 | 353,818,100 | 3,393,996,300 |
| புத்தளம் | 71,159,460 | 71,857,460 | 71,857,460 | 134,020,860 | 134,020,860 | 134,049,120 | 133,918,700 | 132,635,180 | 131,969,980 | 131,590,780 | 131,403,180 | 130,810,780 | 1,409,293,820 |
| அநுராதபுரம் | 149,273,840 | 149,220,260 | 149,220,260 | 143,966,740 | 143,966,740 | 143,685,800 | 143,905,600 | 143,758,380 | 143,495,980 | 143,679,420 | 142,825,860 | 142,675,400 | 1,739,674,280 |
| பொலன்னறுவை | 125,680,000 | 125,680,000 | 125,680,000 | 68,258,240 | 68,258,240 | 68,288,740 | 67,934,960 | 67,677,400 | 67,601,880 | 67,465,620 | 67,220,560 | 67,140,180 | 986,885,820 |
| பதுளை | 31,247,000 | 31,247,000 | 31,247,000 | 133,063,900 | 133,063,900 | 133,067,740 | 133,071,000 | 132,809,620 | 132,687,220 | 132,507,580 | 132,312,080 | 132,157,040 | 1,288,481,080 |
| மொனராகலை | 21,640,780 | 21,640,780 | 21,640,780 | 109,469,840 | 109,469,840 | 108,263,640 | 108,190,700 | 108,116,220 | 108,095,600 | 107,935,520 | 107,628,320 | 107,534,520 | 1,039,626,540 |
| இரத்தினபுரி | 26,692,480 | 26,692,480 | 26,692,480 | 279,670,940 | 279,670,940 | 279,694,400 | 279,272,380 | 278,789,740 | 277,783,220 | 277,246,140 | 276,814,080 | 276,039,680 | 2,585,058,960 |
| கேகாலை | 27,557,000 | 27,557,000 | 27,557,000 | 159,614,260 | 159,614,260 | 159,165,600 | 158,605,620 | 157,801,060 | 157,749,920 | 157,358,400 | 156,090,040 | 155,565,440 | 1,504,235,600 |
| மொத்தம் | **2,908,077,880** | **2,909,052,020** | **2,907,760,720** | **3,523,298,740** | **3,523,298,740** | **3,512,040,280** | **3,507,456,080** | **3,499,594,380** | **3,492,320,660** | **3,486,034,880** | **3,475,993,860** | **3,464,808,400** | **40,209,736,640** |

## 06. சமூக பாதுகாப்புப் பிரிவின் செயலாற்றுகை அறிக்கை

வாழ்வின் எழச்சி (சமூர்தி) வலுவூட்டும் வரை, அவர்களின் குடும்ப அடிப்படை தேவை நிறைவேற்றுவதற்காக சமூக பாதுகாப்பு நிதியத்தின் ஊடாக, அவர்களது பிறப்பு முதல் இறப்பு வரை அவசியமான சந்தர்ப்பங்களில் ஏற்படும் பல்வேறு பண உதவிகளில் உதவி புரிவதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதே இப் பிரிவின் பிரதான நோக்கமாகும்.

வாழ்வின் எழுச்சி சமூகப் பாதுகாப்பு நிதியம் 1997 ஜனவரி 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

**நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்தோர்:-** சமூர்தி நிவாரணம் பெறும் அனைத்துக் குடும்பங்களும்.

**நிதியத்தின் பங்களிப்புப் பணம் :-** சமூர்தி உதவி பெறும் பயனாளிகளுக்கு வழங்கப்படும் கொடுப்பனவிலிருந்து கழிக்கப்படும் தொகையாகும். (ரூபா 45/= )

**நிதியத்தின் ஊடாக நிறைவேற்றப்படும் அடிப்படை பணிகள் :-**

- நிவாரணம் பெறும் குடும்பங்களின் சமூக பொருளாதார நிலைமை மோசமடையும் சந்தர்ப்பங்களான மரணம் நிகழ்தல், நோய்வாய்ப்படுதல் ஆகிய சந்தர்ப்பங்களில் செய்ய வேண்டி ஏற்படுகின்ற செலவுகளைக் குறைப்பதற்காக நிதியுதவி வழங்குதல்.
- குடும்பத்தின் அத்தியவசி சமூகத் தேவைகளான பிள்ளைப் பேறு மற்றும் திருமணம் என்பவற்றுக்கான செலவுகளைக் குறைப்பதற்கு நிதியுதவி வழங்குதல்.
- சமுர்தி உதவி பெறும் குடும்பத்தின் மூன்றாம்நிலைக் கல்வியில் ஈடுப்பட்டுள்ள பிள்ளைகளுக்கு சிப்தொர புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக புலமைப் பரிசில் நிதியுதவிகளை வழங்குவதன் ஊடாக அப்பிள்ளைகளின் கல்விக்கு உதவுதல்.

**வழங்கப்படும் பயன்களின் பெறுமதி,**

I. பிள்ளைப் பேற்றின் போது ரூபா. 5,000/= உம்,

II. விவாகத்தின் போது ரூபா. 5,000/= உம்,

III. வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் ரூபா. 6,000/= உம், ( ஒரு நாளைக்கு ரூபா 200/- என்ற அடிப்படையில் வருடத்தில் 30 நாட்களுக்கு மாத்திரம். )

IV. மரணத்தின் போதுரூபா. 10,000/= உம்,

V. சிப்தொர புலமைப் பரிசில் மாதாந்த கொடுப்பனவு ரூபா. 1000/= .

க.பொ.த. (உ.ப) இரண்டு வருட கல்விக் காலத்திற்கு ரூபா. 24,000/- புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது. (25 மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் புலமைப் பரிசில் பெறுபவர்களின் மொத்த எண்ணிக்கை 10,000

| இல | மாவட்டம் | பிறப்பு | | திருமணம் | | நோய் | | இறப்பு | | புலமைப்பரிசில் | | பிரயாண செலவு | | வேறு செலவு | | கணக்காய்வு செலவு | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அளவு | தொகை ரு | அளவு | தொகை ரு | அளவு | தொகை ரு | அளவு | தொகை ரு | அளவு | தொகை ரு | அளவு | தொகை ரு | அளவு | தொகை ரு | அளவு | தொகை ரு | அளவு | தொகை ரு |
| 1 | கொழும்பு | 51 | 255,000.00 | 401 | 2,005,000.00 | 328 | 996,000.00 | 654 | 6,540,000.00 | 5845 | 5845000.00 | 46 | 40236.00 | 0 | 276,632.23 | 0 | | 7325 | 15,957,868.23 |
| 2 | கம்பஹா | 255 | 1,275,000.00 | 1493 | 7,465,000.00 | 1525 | 4,513,000.00 | 1650 | 16,500,000.00 | 11199 | 11,199,000.00 | 82 | 77,597.00 | 0 | 916,976.67 | 0 | | 16204 | 41,946,573.67 |
| 3 | களுத்துறை | 145 | 725,000.00 | 982 | 4,910,000.00 | 865 | 2,328,600.00 | 1293 | 12,930,000.00 | 8514 | 8,514,000.00 | 2 | 1,986.00 | 0 | 587,995.79 | 0 | 205,365.00 | 11801 | 30,202,946.79 |
| 4 | கண்டி | 227 | 1,135,000.00 | 791 | 3,955,000.00 | 1100 | 3,067,400.00 | 963 | 9,630,000.00 | 11785 | 11,785,000.00 | 26 | 19,694.00 | 5 | 442,480.79 | 0 | | 14897 | 30,034,574.79 |
| 5 | மாத்தளை | 132 | 660,000.00 | 454 | 2,270,000.00 | 517 | 1,429,800.00 | 502 | 5,020,000.00 | 7440 | 7,440,000.00 | 0 | | 0 | 150,486.17 | 0 | 20,208.00 | 9045 | 16,990,494.17 |
| 6 | நுவரெலியா | 201 | 1,005,000.00 | 482 | 2,410,000.00 | 610 | 1,684,400.00 | 775 | 7,750,000.00 | 5885 | 5,885,000.00 | 55 | 58,470.00 | 0 | 326,011.11 | 0 | | 8008 | 19,118,881.11 |
| 7 | காலி | 157 | 785,000.00 | 1187 | 5,935,000.00 | 918 | 2,582,600.00 | 1358 | 13,580,000.00 | 11013 | 11,013,000.00 | 82 | 80,570.00 | 0 | 797,720.43 | 0 | | 14715 | 34,773,890.43 |
| 8 | மாத்தறை | 353 | 1,765,000.00 | 1261 | 6,305,000.00 | 1243 | 3,491,800.00 | 1161 | 11,610,000.00 | 8995 | 8,995,000.00 | 66 | 65,359.00 | 4 | 508,780.77 | 0 | | 13083 | 32,740,939.77 |
| 9 | ஹம்பாந்தோட்டை | 341 | 1,705,000.00 | 1137 | 5,685,000.00 | 901 | 2,536,800.00 | 798 | 7,980,000.00 | 6112 | 6,112,000.00 | 65 | 71,470.50 | 0 | 183,934.47 | 0 | 33,109.00 | 9354 | 24,307,313.97 |
| 10 | யாழ்ப்பாணம் | 310 | 1,550,000.00 | 792 | 3,960,000.00 | 813 | 2,176,800.00 | 656 | 6,560,000.00 | 9549 | 9,549,000.00 | 0 | 0.00 | 0 | 335,458.22 | 0 | | 12120 | 24,131,258.22 |
| 11 | மன்னார் | 162 | 810,000.00 | 337 | 1,685,000.00 | 314 | 836,000.00 | 141 | 1,410,000.00 | 7041 | 7,041,000.00 | 0 | 0.00 | 0 | | 0 | | 7995 | 11,782,000.00 |
| 12 | வவுனியா | 71 | 355,000.00 | 158 | 790,000.00 | 163 | 486,000.00 | 116 | 1,160,000.00 | 2082 | 2,082,000.00 | 0 | 0.00 | 0 | 147,763.17 | 0 | | 2590 | 5,020,763.17 |
| 13 | முல்லைத்தீவு | 163 | 815,000.00 | 118 | 590,000.00 | 159 | 546,800.00 | 76 | 760,000.00 | 451 | 451,000.00 | 0 | 0.00 | 0 | | 0 | | 967 | 3,162,800.00 |
| 14 | கிளிநொச்சி | 58 | 290,000.00 | 131 | 655,000.00 | 115 | 334,800.00 | 80 | 800,000.00 | 167 | 167,000.00 | 0 | 0.00 | 0 | | 0 | | 551 | 2,246,800.00 |
| 15 | மட்டக்களப்பு | 414 | 2,070,000.00 | 1934 | 9,670,000.00 | 1695 | 4,144,400.00 | 799 | 7,990,000.00 | 11066 | 11,066,000.00 | 38 | 38,000.00 | 0 | | 0 | | 15946 | 34,978,400.00 |
| 16 | அம்பாறை | 643 | 3,215,000.00 | 2503 | 12,515,000.00 | 2669 | 6,112,800.00 | 977 | 9,770,000.00 | 9035 | 9,035,000.00 | 15 | 14,879.10 | 0 | 671,809.17 | 0 | | 15842 | 41,334,488.27 |
| 17 | திருகோணமலை | 187 | 935,000.00 | 825 | 4,125,000.00 | 453 | 1,263,000.00 | 408 | 4,080,000.00 | 6935 | 6,935,000.00 | 18 | 15,131.00 | 0 | 228,176.84 | 0 | | 8826 | 17,581,307.84 |
| 18 | குருநாகல் | 603 | 3,015,000.00 | 1965 | 9,825,000.00 | 2318 | 6,765,400.00 | 2108 | 21,080,000.00 | 15731 | 15,731,000.00 | 9 | 6,423.00 | 0 | 1,030,580.46 | 0 | | 22734 | 57,453,403.46 |
| 19 | புத்தளம் | 371 | 1,855,000.00 | 860 | 4,300,000.00 | 527 | 1,598,400.00 | 719 | 7,190,000.00 | 8945 | 8,945,000.00 | 72 | 45,440.40 | 0 | 471,531.70 | 0 | 317,550.00 | 11494 | 24,722,922.10 |
| 20 | அநுராதபுரம் | 353 | 1,765,000.00 | 749 | 3,745,000.00 | 796 | 2,235,400.00 | 664 | 6,640,000.00 | 8376 | 8,376,000.00 | 60 | 57,565.00 | 0 | 330,626.40 | 0 | | 10998 | 23,149,591.40 |
| 21 | பொலன்னறுவை | 184 | 920,000.00 | 428 | 2,140,000.00 | 330 | 1,030,600.00 | 342 | 3,420,000.00 | 4474 | 4,474,000.00 | 41 | 40,400.00 | 0 | 181,349.52 | 0 | | 5799 | 12,206,349.52 |
| 22 | பதுளை | 288 | 1,440,000.00 | 1178 | 5,890,000.00 | 1510 | 3,931,400.00 | 925 | 9,250,000.00 | 9302 | 9,302,000.00 | 90 | 89,269.00 | 26 | 547,753.03 | 0 | | 13319 | 30,450,422.03 |
| 23 | மொனராகலை | 269 | 1,345,000.00 | 920 | 4,600,000.00 | 812 | 2,240,600.00 | 595 | 5,950,000.00 | 8579 | 8,579,000.00 | 36 | 31,783.00 | 0 | 264,640.79 | 0 | | 11211 | 23,011,023.79 |
| 24 | இரத்தினபுரி | 544 | 2,720,000.00 | 2299 | 11,495,000.00 | 1682 | 5,044,600.00 | 1981 | 19,810,000.00 | 11320 | 11,320,000.00 | 8 | 5,468.00 | 0 | 616,851.69 | 0 | | 17834 | 51,011,919.69 |
| 25 | கேகாலை | 132 | 660,000.00 | 867 | 4,335,000.00 | 1185 | 3,438,600.00 | 1172 | 11,720,000.00 | 8988 | 8,988,000.00 | 22 | 26,026.00 | 0 | 665,978.12 | 0 | | 12366 | 29,833,604.12 |
| | மொத்தம் | 6614 | 33,070,000.00 | 24252 | 121,260,000.00 | 23548 | 64,816,000.00 | 20913 | 209,130,000.00 | 198829 | 198,829,000.00 | 833 | 785,767.00 | 35 | 9,683,537.54 | 0 | 209,130,000.00 | 275024 | 638,150,536.54 |

## 07சமூக அபிவிருத்திப் பிரிவு

சமூக அபிவிருத்தி என்பது சமூகத்தின் அனைத்துத் துகைளினதும் ஒட்டுமொத்த அபிவிருத்தியாகும். ஒட்டுமொத்த சமுதாயத்திலும் ஆத்மிக அபிவிருத்தி நிரம்பிய சூழலொன்றை உருவாக்குவது இதன் அடிப்படைக் குறிக்கோளாகும்.

### பின்னணி

“சமூக அபிவிருத்தியின்றி பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாது” என்ற தொனிப்பொருளாகக் கொண்டு 2015 ஆம் ஆண்டில் சமூக அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு இப்பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

- சமுதாயத்தின் பலவீனமான அனைத்துக் குழுக்களினதும் மேம்பாட்டுக்கு நடவடிக்கை எடுத்தல்.
- வறுமைக்குக் காரணமாக அமையும் சமூகக் காரணிகளை இனங் கண்டு பரிகார நடவடிக்கைகளை எடுத்தல்.
- குறைந்த வருமானம் பெறுபவர்களினதும் அக்குடும்பங்களின் பிள்ளைகளினதும் சமூக மற்றும் கலாசாரப் பெறுமானங்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- ஆன்மீக மற்றும் பண்பாடுகள் நிரம்பிய குடும்பமொன்றை உருவாக்குதல்.
- சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அனைத்து நிகழ்ச்சிகளினதும் மாதிரிகளாக மாவட்டமொன்றுக்கு ஒரு கிராமத்தைத் தெரிவு செய்து அதனை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.

### தற்போதைய வகிபாகம்

மேற்குறித்த குறிக்கோள்களைப் பூர்த்திசெய்வதற்காக 2015 ஆம் ஆண்டில் சமூக அபிவிருத்திப் பிரிவுக்கு திறைசேரியின் மானியமாக 50 மில்லியன் ரூபா கிடைத்துள்ளது. வாழ்வின் எழுச்சி தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்த வகையில் நடைமுறைப்படுத்தப்படும் ஆத்மீக மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சியை இப்பணத்தைப் பயன்படுத்தி நாடளாவிய மட்டத்தில் நடைமுறைப்படுத்துவது சமூக அபிவிருத்திப் பிரிவின் பொறுப்பாகும். இவை தவிர வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் சமுர்தி அமைச்சின் ஊடாக 200 மில்லியன் ரூபா திறைசேரி ஒதுக்கீடாகக் கிடைத்ததுடன் அதில் 187.8 மில்லியன் ரூபா வீடமைப்புக்ககாகவும் மீதமுள்ள 12.2 மில்லியன் ரூபா ஓடுகள் வழங்குவதற்காகவும் பயன்படுத்தப்பட்டது. இவை தவிர, சமூக அபிவிருத்தி மன்றத்தின் நிதியத்தைப் பயன்படுத்தியும் இவ்வருடத்தில் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சியின் இலக்குகள் பூர்த்தி செய்யப்பட்டன.

இதனடிப்படையில் பின்வரும் 5 பிரதான பிரிவுகளின் குறித்த நிகழ்ச்சி நடைமுறைப்படுத்தப்பட்டது.

01 ஆத்மீக மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

I. ஆத்மீக அபிவிருத்தி

II. மதுபான மற்றும் புகைப்பிடித்தல் நிவாரணம்

III. மகிழ்ச்சியான குடும்பம் நிகழ்ச்சி

IV. சிறுவர் பாதுகாப்பு, சிறுவவர் சமுதாய நிகழ்ச்சி

02. திரிய பியஸ வீடமைப்பு நிகழ்ச்சி
03. மாதிரிக் கிராம நிகழ்ச்சி
04. சர்வதேச தினக் கொண்டாட்ட நிகழ்ச்சி
05. விசேட நிகழ்ச்சிகள்

## 7.1. ஆத்மீக மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சி

### I.i ஆத்மீக அபிவிருத்தி

- சமயத் தலங்களைச் சூழவுள்ள மக்களை ஒன்று சேர்த்து அவர்களை கொள்கைசார்ந்த ஒரு சமுதாயமாக மாற்றுதலும் சமய நம்பிக்கையையும் விழிப்புணர்வையும் மேம்படுத்துதல்.

- சமயத் தலங்களையும் பொது இடங்களையும் வீடுகளையும் சூழ சிரமதானங்களை ஏற்பாட செய்தல், சூழல் நட்புறவான வீட்டுத் தோட்டச் செய்கை முறையை உருவாக்கி பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்கப் பழக்குதல்.

- அறநெறிப் பாடசாலைக் கல்வியை நோக்கி பிள்ளைகளைத் திசைப்படுத்துதலும் ஒவ்வொரு சமயத் தலத்திலும் அறநெறிப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல்.

- கிராம மட்டத்தில் சிறுவர், இளைஞர், முதியோர் சமுதாயங்களின் மனப்பாங்குகளை விருத்திசெய்து அழகியல் நய உணர்வை மேம்படுத்துதல்.

  - ஆத்மீக மேம்பாட்டு நிகழ்ச்சிகள் - 9200
  - இதற்குச் செலவாகிய தொகை - 0.16 மில்லியன் ரூபா

## 7.1.1 போதைப்பொருள் நிவாரண நிகழ்ச்சி

குறைந்த வருமானம் பெறுபவர்களின் பொருளாதார அபிவிருத்திக்குப் பெரும் தடையாகக் காணப்படும் மது மற்றும் சிகரட் பாவனையினால் பொருளாதாரத்திற்கும் சமூகத்திற்கும் ஏற்படும் அழிவுகள் தொடர்பில் அறிவூட்டி, அதற்கு எதிராக தன்னார்வ அமைப்புக்கள்,

சமய நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் ஏனைய சமூக நிறுவனங்களுடன் இணைந்து அவற்றை அடிப்படையாகக் கொண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவு, பிரதேச செயலாளர் பிரிவு, மாவட்ட மட்டத்தில் நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துதல்.

❖ போதைப்பொருள் பாவனை மற்றும் புகைத்தல் தொடர்பில் காணப்படும் தரவுகளை ஒன்று சேர்த்தலும் புதிய மதிப்பாய்வுகளின் ஊடாகத் தகவல்களைச் சேகரித்தலும்.

❖ சிறுவர், இளைஞர், முதியோர் சமுதாயங்கள் மத்தியில் போதைப்பொருளின் தீங்குகள் தொடர்பில் முறையான விழிப்புணர்வை ஏற்படுத்துதலும் போதைப்பொருள் தொடர்பில் சமூதாயத்தில் காணப்படும் மனப்பாங்குகள் தொடர்பில் அறிவூட்டிக் கவர்ச்சியைக் குறைப்பதற்கான செயற்பாடுகளை பாடசாலை மட்டத்திலும் ஏனைய சமுதாய அமைப்புக்களின் ஊடாகவும் சமயத் தலங்களின் ஊடாக மேற்கொள்ளுதல்.

❖ சிறுவர், இளைஞர் மற்றும் முதியோர் குழுக்களை பயனுறுதி வாய்ந்த போதைப்பொருள் நிவாரணச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் போதைப்பொருள் நிவாரணக் குழுக்களை உருவாக்கி இயக்குதல்.

❖ சமுதாயத்தில் மதுப்பாவனையாளர்களின் அநீதியான நடத்தைகளை இனங்கண்டு அவற்றுக்கு எதிராகப் போராடுவதற்கு சமுதாயங்களுக்கு அறிவூட்டுதல்.

❖ சிறுவர்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் விளம்பரங்கள் மற்றும் ஏனைய சக்திகளுக்கு எதிராகச் செயற்படக்கூடிய பெற்றோர் குழுக்களையும் தாக்கக் குழுக்களையும் உருவாக்குதல்.

❖ புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய சட்டம் தொடர்பில் மக்களுக்க அறிவூட்டுதலும் அச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மக்களுக்கு வலுவூட்டுதலும்.

❖ அச்சட்டம் தொடர்பில் கடைகளின் உரிமையாளர்களூக்கு அறிவூட்டுதலும் அச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவற்காக மக்களுக்கு வலுவூட்டுதலும்

❖ அச்சட்டம் தொடர்பில் கடைகளின் உரிமையாளர்களுக்கு அறிவூட்டி சிகரட் பாவனை விளம்பரங்களைத் தூண்டாத கடைகளை உருவாக்குதல்.

- நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை - 70
- அதற்குச் செலவாகிய தொகை - 1.3 மில்லியன் ரூபா

### 7.1.2 மகிழ்ச்சியான குடும்பம் நிகழ்ச்சி

சமூக அமைப்பின் பலம் குடும்பமாகும். குடும்ப அலகுகளுக்கு மத்தியில் பரஸ்பர தொடர்பும் நற்புறவும் சிறப்பாகக் காணப்பட்டால் மாத்திரமே சமுதாயம் சிறந்ததாக மாறும்.

- ❖ வீட்டு அலகினுள் சரியான தொடர்பாடலை மேம்படுத்துவதன் ஊடாக ஒருவரை ஒருவர் மதித்தல், அங்கீகரித்தல், அன்பு, பாசம் மற்றும் பரஸ்பர நல்லுறவு என்பவற்றை விருத்தி செய்வதற்கு வழிகாட்டுதல்.

- ❖ சிறந்த வீட்டு முகாமைத்துவத்தை உருவாக்கி குடும்ப அலகினுள் போஷாக்கு, பாதுகாப்பு, சுதந்திரம் என்பவற்றை விருத்தி செய்து இரசாயன உரப் பாவனையற்ற வீட்டுத் தோட்டச் செய்கையின் ஊடாகத் தன்னிறைவு பெற்ற குடும்பங்களை உருவாக்குவதற்காக வீட்டு அலகுகளைத் திசைப்படுத்துதல்.

- ❖ சரியான அழகியல் நயத்தல் செயற்பாடுகளை ஊக்குவித்தலும் ஆண் பெண் சமுதாயங்கள் தொடர்பான விளக்கத்தை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- ❖ வீட்டு வன்முறையைக் குறைப்பதற்குத் தேவையான வழிகாடடல்களை வழங்குதல்.

  - ➢ நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை - 65
  - ➢ அதற்குச் செலவாகிய தொகை - 1.0 மில்லியன் ரூபா

### 7.1.3 சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் சமுதாய நிகழ்ச்சி

இந்நாட்டின் எதிர் காலச் உரிமையாளர்களாக சிறுவர்கள் விளங்குகின்றனர். அந்த மரபுரிமையைப் பொறுப்பேற்பதற்கும் அவர்களது உலகிற்கு மெருகூட்டுவதற்கும் திறமைகளை விருத்தி செய்து அறிவும் தைரியமும் மிக்க பிள்ளைகளாக அவர்களை வளர்ப்பது அவசியமாகும். அவ்வாறு வலுவூட்டப்பட்ட பிள்ளைகள் சிறந்த ஆளுமை மிக்கவர்களாகவும் சவால்களை ஏற்கக்கூடிய அபிமானம் மிக்க பிரசைகளாக எதிர்கால உலகில் பிரவேசிக்க உதவுவதே இந்நிகழ்ச்சியின் அடிப்படைக் குறிக்கோளாகும். வாழ்வின் எழுச்சி சிறுவர் கழகம் என்ற பெயரில் ஒவ்வொரு பிரிவிலும் செயற்படும் சிறுவர் கழகமொன்று ஏற்கனவே தாபிக்கப்பட்டுள்ளதுடன் மீண்டும் மறுசீரமைக்கும் செயற்பாடுகள் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்படும்.

- ❖ போதைப்பொருளுக்கு அடிமையாகும் இலக்குக் குழுவாகவுள்ள பிள்ளைகளை அதிலிருந்து விடுவிப்பது சிறுவர் கழக நிகழ்ச்சியின் ஒரு குறிக்கோளாகும்.

- ❖ ஒவ்வொரு கிராமத்திலும் செயலூக்கமிக்க சிறுவர் கழகமொன்றை உருவாக்குதல் (நிபுன சிறுவர் உலகம் கைநூலின் அடிப்படையில்)

- ❖ சிறுவர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பிலும் சிறுவர்களின் கடமைகள் மற்றும் உரிமைகள் தொடர்பிலும் பெற்றோருக்கு அறிவூட்டுதல்.

- ❖ சிறுவர் துஷ்பிரயோகத்தைக் குறைத்து சிறுவர் பாதுகாப்பை மேம்படுத்துதல்.

- ❖ ஒவ்வொரு ஊரிலும் வாழும் பிள்ளைகளுக்கான கலாசார மற்றும் அழகியல் பெறுமானங்களை மேம்படுத்துதல், அறிவு மேம்பாடு, நயத்தல் போன்ற நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். அதன் மூலம் உணர்ச்சியுள்ள பிள்ளைகளை உருவாக்குதல்

- ❖ பிரிவு மட்டத்தில் உள்ள பிள்ளைகளில் குறைந்தபட்சம் 60 சதவீதமானவர்களையேனும் இச்சிறுவர் கழகங்களில் பங்கேற்கச் செய்தல் (5-18 வயதுக்கு இடைப்பட்டவர்கள்).

- ❖ பாடசாலை செல்லும் வயதிலுள்ள எனினும் பாடசாலை செல்லாத பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்ப்பதற்குத் தூண்டுதல்.

நாடு முழுவதிலும் இயங்கும் இந்த சிறுவர் கழகங்கள் பிள்ளைகளின் கலாசார மற்றும் இலக்கிய ஆற்றல்களுக்கு மெருகூட்டுவதற்காக ப் பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் கணிப்புக்குள்ளாக்குவதற்காகப் போட்டித் தொடர்கள் நடாத்தப்பட்டன. 2014 ஆம் ஆண்டில் மாவட்ட மட்டம் வரையில் தெரிவு செய்யப்ப்படட பிள்ளைகளுக்கான தேசிய மட்டப் போட்டிகள் 2015 ஜூலை மாதம் 12 ஆந் திகதி மாலபேயிலுள்ள ராஹுல மகளிர் கல்லூரியில் சிங்கள மொழிமூலமான சிறுவர் கழகங்களின் பிள்ளைகளுக்கான போட்டிகள் 03 வயதுப் பிரிவுகளின் கீழ் 12 நிகழ்ச்சிகளாக நடாத்தப்பட்டன. மேலும் தமிழ் மொழிமூலப் பிள்ளைகளுக்கான போட்டிகள் 2015 ஜூலை மாதம் 26 ஆந் திகதி மாலபே ராஹுல மகளிர் கல்லூரியில் நடாத்தப்பட்டன.

- ➢ நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை - 10
- ➢ செலவாகிய தொகை - 3.3 மில்லியன் ரூபா





### 7.1.4 திரிய பியஸ வீடமைப்பு நிகழ்ச்சி

குறைந்த வருமானம் பெறும் வீடொன்றைச் சொந்தமாக வைத்திராத ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீடொன்றை வழங்கும் நோக்கில் வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சியின் கீழ் மிகவும் கவர்ச்சியான நிகழ்ச்சியாக திரிய பியஸ வீடமைப்பு நிகழ்ச்சி நடைமுறைப்படுத்தப்படுகின்றது. காணி உள்ள போதிலும் வீடொன்றை நிர்மாணிப்பதற்கான வசதியில்லாத குடும்பங்களுக்கு இந்த உரிமை வழங்கப்படுகின்றது. இதன் போது குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ள பாடசாலை செல்லும் வயதிலுள்ள பெண் பிள்ளைகள் உள்ள வயது முதிர்ந்த பெற்றோரைப் பராமரிக்கும் குடும்பங்கள், அங்கவீனப் பெற்றோர்கள் சகோதரர்கள் உள்ள குடும்பங்கள், பிரதான உழைப்பாளி மரணித்துள்ள அல்லது அங்கவீனமடைந்துள்ள வயது வந்த பிள்ளைகள் உள்ள குடும்பங்கள், பெற்றோரை இழந்த பாதுகாவலர்களாக பாட்டன் அல்லது பாட்டியிடம் தங்கி வாழ்கின்ற பாடசாலை செல்லும் பிள்ளைகளுள்ள குடும்பங்கள், அரைவாசி நிர்மாணிக்கப்பட்டு பல வருடங்களாகப் பூர்த்தி செய்ய முடியாத நிலையிலுள்ள வீடுகள் என்பன தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டது.

இவ்வருடத்தினுள் வீடமைப்பு மற்றும் சமுர்தி அபிவிருத்தி அமைச்சின் ஊடாக தேர்தல் தொகுதியொன்றுக்கு 15 வீடுகள் என்ற அடிப்படையில் 160 தொகுதிகளில் 2400 வீடுகளை நிர்மாணிப்பதை இலக்காகக் கொண்டு ஒரு வீட்டு 75,000/- ரூபா என்ற அடிப்படையில் 187.8 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டது. அதன் கீழ் 2504 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன.

இது தவிர, மாவட்ட செயலகங்களின் ஊடாகச் சிபாரிசு செய்யப்படும் குறைந்த வருமானம் பெறுபவர்களினால் முன்வைக்கப்படும் கோரிக்கைகளும் பத்திரிகை அறிவித்தல்களின் ஊடாக அடையாளம் காணப்படும் பயனாளிகள் உரிய பிரதேச செயலாளர் பிரிவின் அவதானிப்பின் பின்னர் வழங்கப்படும் சிபாரிசுகளுக்கான விசேட திரிய பியஸ திட்டத்தின் கீழ் இவ்வருடத்தில் 511 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன.

இவ்வாறு பயனாளிகளின் பங்களிப்பு மற்றும் வெளிவாரியான தன்னார்வளர்ள் ஆகியோரின் தலையீட்டின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட வீடொன்றின் பெறுமதி 400,000/= ரூபாவுக்கும் 500,000/= ரூபாவுக்கும் இடைப்பட்டதாகும்.

- நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை - 3015 ஆகும்.
- செலவாகிய தொகை -225.9 மில்லியன் ரூபாவாகும்.

**பதுளை மாவட்டத்தின்**
**ஹல்துமுல்லை பிரதேச செயலாளர் பிரிவில்**
**கிதுள்கஹ அராவ பிரிவில் கே.எம். சுபரத்ன மெணிகே என்பவரின் வீடு நிர்மாணத்திற்கு முன்னரும் பின்னருமான நிலை**





## 7.2. மாதிரிக் கிராம நிகழ்ச்சி

தனிநபர் அபிவிருத்தி என்பது பொருளாதார, உடல், உள, சமூக, ஆன்மி மற்றும் சூழல் அபிவிருத்தி ஆகிய அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய அபிவிருத்தியை நோக்கி தனிநபர்களை ஆற்றுப்படுத்துவதாகும். ஆட்களினதும் குடும்பங்களினதும் குழுக்களினதும் சமுதாயத்தினதும் வருமானம் உழைப்பதற்குத் திட்டமிட்ட செயற்திட்டங்களுக்கான வசதி ஏற்பாடுகளைச் செய்து கொடுத்து தொழில்வாய்ப்புக்களை மேம்படுத்தி சமூக பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை ஊக்குவிப்பது அவசியமாகும். வாழ்வாதாரம் அபிவிருத்தி செய்யப்பட்ட சமுதாயத்தின் நல்வாழ்வுக்கு உகந்த அறிவுபூர்வமான சமூகச் சூழலொன்றைக் கொண்ட சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து நிகழ்ச்சிகளுக்குமான முன்னுதாரணமான கிராமமொன்றை அபிவிருத்தி செய்வது இந்த மாதிரிக் கிராம நிகழ்ச்சியின் நோக்கமாகும். அதற்குத் தேவையான சமூகப் பின்னணியைக் கட்டியெழுப்பி பங்கேற்பின் மூலம் அதிகமான குடும்பங்களை ஒருங்கிணைக்கும் கிராமமொன்றை உருவாக்குவதே மாதிரிக் கிராமங்களை அமைபதற்கான ஆரம்ப கட்டமாகும்.

2015 ஆம் ஆண்டில் மாவட்டத்தின் ஒரு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து சமூக மற்றும் பௌதிக ரீதியில் அதிகமான சவால்களுக்கு முகங்கொடுக்கும் கிராமமொன்று மாதிரிக் கிராம நிகழ்ச்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதனை சமூக மற்றும் பௌதிக ரீதியில் அபிவிருத்தி செய்து மாவட்டத்தின் பிரதான மாதிரியாக உருவாக்கப்படும். இலக்காகக் கொள்ளப்பட்ட அபிவிருத்தி நிலைமைகள் நிரம்பிய மாதிரிக் கிராமமாக அது அமைக்கப்பட வேண்டும் என்பதனால் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அதனை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கும் ஒரு மாதிரிக் கிராம என்ற அடிப்படையில் 332 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதன் பின்னர் 2016 ஆம் ஆண்டில் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் அந்த மாதிரிக் கிராமங்களுக்கான பூர்வாங்க செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதன் போது தொழிற்பாட்டுக்குழு மாவட்டச் செயற்பாட்டுக் குழு, பிரதேச செயற்பாட்டுக் குழு என்பவற்றின் ஊடாக மாதிரிக் கிராமத்தின் ஆரம்ப கட்டச் செயற்பாடுகளின் அமுலாக்கம் தொடர்பான மேற்பார்வையும் பிந்திய விபரம் சேகரிப்பும் மேற்கொள்ளப்படும்.

இதன் போது, நிறுவனத் தலைவர்கள், தன்னார்வ அமைப்புக்கள் மற்றும் பொறுப்புள்ள அதிகாரிகள் அனைவரையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வேலைத் திட்டமொன்ற ஆரம்பித்து சமூக மற்றும் பௌதிக சவால்களுக்குத் தீர்வு காண்பதற்கு, சமூக அபிவிருத்தி, வாழ்வாதார சமுதாயம், நுண் நிதி மற்றும் சந்தைப்படுத்தல் ஆகிய பிரிவுகளின் பங்களிப்பு பெறப்படுகின்றது.

- நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை - 300
- செலவாகிய தொகை - 2.25 மில்லியன் ரூபா

## 7.3. சர்வதேச தினக் கொண்டாட்ட நிகழ்ச்சிகள்

### 7.3.1 சர்வதேச மகளிர் தினம் (மார்ச் 08)

ஆத்மீக பண்பு நிரம்பிய சுபீட்சமிக்கதும் நற்பண்புகள் நிரம்பியதுமான சமுதாயமொன்றை உருவாக்குவதற்காகச் சிறந்த குடும்பச் சூழலொன்றை உருவாக்குவதில் பெண்களின் வகிபாகம் மிக முக்கியமானதாகும். மேலும் சமுதாயத்தின் நல்வாழ்வுக்காகப் பெண்களின் தலைமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது காலத்தின் தேவையாகும். அதனால், 2015 ஆம் ஆண்டில் அவர்களின் பங்களிப்பைச் செயலூக்கப்படுத்தி அதற்காக வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சியுடன் இணைந்து குறைந்த வருமானம் பெறும் பெண்களின் பங்களிப்பைப் பெறுவதற்கும் ஏற்கனவே வலுவூட்டப்பட்ட பெண்களைக் கணிப்புள்ளாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதற்காக பிரதேச செயலாளர் பிரிவொன்றுக்கு சமூக அபிவிருத்தி மன்றத்தின் நிதியத்திலிருந்து 10,000/- வழங்கப்பட்டது.

- நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை - 290
- செலவாகிய தொகை - 61 மில்லியன் ரூபா

### <u>7.3.2 சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினம் - மே 31</u>

குறைந்த வருமானம் பெறும் மக்களைப் பாதிக்கும் முக்கியமான காரணி அவர்கள் வளப் பற்றாக்குறையை எதிர்நோக்குவது மட்டுமன்றி அதற்கு அப்பால் சென்று பல்வேறு சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு கிடைக்கக்கூடிய வளங்களையும் நாசம் செய்கின்றமை தெளிவாகப் புலப்படக் கூடிய ஒரு விடயமாகும். இதன் முக்கியமான சமூக விரோத வடிவமாக மது மற்றும் சிகரட் பாவனையைக் குறிப்பிட முடியும். இதன் மூலமும் பொருளாதார வளங்களும் அழிக்கப்படுகின்றன.

சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினத்தின் குறிக்கோள் சுகாதார ரீதியான பாதிப்புக்களை மாத்திரமன்றி புகைத்தல் மற்றும் அதனால் வெளியிடப்படும் புகைகளின் சமூக, சுற்றாடல் மற்றும் பொருளாதார வீழ்ச்சி ஏற்படுவதை எதிர்ப்பதும் சமகால மற்றும் எதிர் காலப் பரம்பரையினரைப் பாதுகாப்பதுமாகும். அதனால், 1996 ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் ஒவ்வொரு வருடமும் மே மாதம் 31 ஆந் திகதி சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினத்தை தொனிப் பொருளாகக் கொண்டு கொடி விற்பனை நிகழ்ச்சி நடாத்தப்படுகின்றது. இது தவிர, சிகரட்டுக்காகச் செலவிடப்படும் பணத்தை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தும் நோக்கில் பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் விசேட நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றன.

20 ஆவது தடவையாகவும் 2015 ஆம் ஆண்டிலும் புகைத்தல் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு போதையற்ற ஒழுக்கமே தேவை என்ற தொனிப் பொருளில் அச்சிடப்பட்ட கொடிகளும் ஸ்டிக்கர்களும் நாடு முழுவதிலும் விநியோகிக்கப்பட்டன. இதற்காக தேசிய மன்றத்தினால் 3.34 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. 20 வருடங்களில் கிடைத்த அதிகூடிய வருமானமாக இவ்வருடத்தில் கொடி விற்பனை மூலம் 129.45 மில்லியன் ரூபா கிடைத்தது.




**இம்முறை அச்சிடப்பட்ட கொடி மற்றும் ஸ்டிக்கர்**

1996 වර්ෂයේ සිට මෙම කොඩි වැඩසටහන ක්‍රියාත්මක වූ අතර වර්තමානය වන විට ඒ තුළින් ලැබූ ආදායම



**அட்டவணை -11 கோடி விற்பனையின் வருமானம்(2010-2015)**

| ஆண்டு | கொடி விற்பனை வருமானம் ரூபா.மில். |
|---|---|
| 2010. | 79.3. |
| 2011. | 86.3. |
| 2012. | 123.5. |
| 2013. | 124.7. |
| 2014. | 90.0. |
| 2015. | 129.45. |

## 7.3.3 சமூக அபிவிருத்தி மன்றம்

சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினத்தில் கொடி விற்பனை மூலம் கிடைக்கப் பெற்ற வருமானத்தை வைப்புச் செய்வதற்கு ஒவ்வொரு பிரதேச மட்டத்திலும் தாபிக்கப்பட்ட சமூக அபிவிருத்தி மன்ற நிதியமொன்று உள்ளது. இந்த நிதியத்தைப் பயன்படுத்தி அப் பிரதேச செயலாளர் பிரவில் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதனடிப்படையில் 2015 ஆம் ஆண்டில் சமூக அபிவிருத்தி மன்றங்களின் ஊடாக நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள் கீழே காட்டப்பட்டுள்ளன. அதற்கிணங்க, 108 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை செலவிடப்பட்டு நாடளாவிய அபிவிருத்தி நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை -12 சமூக அபிவிருத்தி மன்ற நிதியங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள் முன்னேற்றம்

| தொடர் இலக்கம் | நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | தொகை ரூபா. |
|---|---|---|---|
| 01. | போதைப் பொருள் நிவாரண நிகழ்ச்சி | 1953. | 61,75,652.00. |
| 02. | சிறுவர் பாதுகாப்பு மற்றும் நலனோம்பல் | 4868. | 1,22,53,525.00. |
| 03. | சிசு திரிய புலமைப் பரிசில் | 7602. | 1,59,80,251.00. |
| 04. | பாடசாலை செல்லாத பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்த்தல் | 1219. | 1,788,5000.00 |
| 05. | பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு உபகரணங்கள் வழங்குதல் | 3348. | 56,17,582.00. |

| | | | |
|---|---|---|---|
| 06. | மகிழ்ச்சியான குடும்பம் நிகழ்ச்சி | 1138. | 10,42,000.00. |
| 07. | மாதிரிக் கிராம நிகழ்ச்சி | 179. | 5,83,000.00. |
| 08. | அங்கவீனர் நலனோம்பல் நிகழ்ச்சிகள் | 559. | 22,66,800.00. |
| 09. | கலாசார மற்றும் ஆத்மீக அபிவிருத்தி நிகழ்ச்சி | 2196. | 66,82,160.00. |
| 10. | வீடு பழுது பார்த்தல் | 795. | 1,43,67,583.00. |
| 11. | வீடமைப்பு | 288. | 1,44,19,175.00. |
| 12. | துப்புரவு நிகழ்ச்சிகள் | 1929. | 1,25,97,360.00. |
| 13. | சர்வதேச தினக் கொண்டாட்டங்கள் | 2064. | 71,89,921.00. |
| 14. | ஏனைய நிகழ்ச்சிகள் | 1148. | 61,41,353.00. |
| மொத்தக் கூட்டுத்தொகை | | 29286. | 10,81,04,862.00. |

## 7.3.4 சர்வதேச எழுத்தறிவு தின - செப்டம்பர் 08

குறைந்த வருமானம் பெறும் மக்களில் அதிகமானோர் தோட்டங்களிலும் நகரப்புற குடிசைகளில் வாழ்கின்றனர். அவர்களின் பாடசாலை செல்ல வேண்டிய வயதிலுள்ள எனினும் குடும்பங்களின் வறுமையின் காரணமாக பாடசாலை செல்லாத பிள்ளைகள் அதிகமானோர் உள்ளனர். எழுத வாசிக்க முடியாத 5 - 14 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளை முறைசார்ந்த பாடசாலைகளில் சேர்த்தல், எழுத்தறிவு மட்டத்தை மேம்படுத்துதல், ஏனைய தொழில்களுக்கு அனுப்புதல் என்பன இந்நிகழ்ச்சியின் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2015 ஆம் ஆண்டில் நாடளாவிய புலமைப் பரிசில் நிகழ்ச்சியொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. ஒரு பிரிவுக்கு ஒரு புலமைப் பரிசில் என்ற அடிப்படையில் 14,100 புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு இலக்காகக் கொள்ளப்பட்டதுடன், இந்த வருடத்தில் அர்ப்பணிப்புத் திட்டத்தின் கீழ் அதிக புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு முன்னோடியாக 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் விதத்தில் 100 பிள்ளைகளைக் கொழும்புக்கு அழைத்து அர்ப்பணிப்பாளர் 100 பேரை அறிமுகப்படுத்தும் புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் சர்வதேச எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு நடாதப்பட்டது.

- பாடசாலைகளில் சேர்க்கப்பட்டோரின் எண்ணிக்கை - 1150
- புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை - 13554
- செலவாகிய தொகை - 0.29 மில்லியன் ரூபா

## 7.4. விசேட நிகழ்ச்சிகள்

### 7.4.1 பயிற்சி

இப்பயிற்சிகள் மாவட்ட முன்னேற்ற மீளாய்வு நிகழ்ச்சிகளுடன் இணைந்த வகையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன் கீழ் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சி, போதைப்பொருள் நிவாரணம், மகிழ்ச்சியான குடும்பம் நிகழ்ச்சிகள், சிறுவர் துஷ்பிரயோகத் தடுப்பு, தற்கொலைத் தடுப்பு, திரிய பியஸ வீடமைப்பு நிகழ்ச்சி, மாதிரிக் கிராமம், சர்வதேச தினங்கள் ஆகிய பிரதான தலைப்புக்களின் கீழ் பயிற்சிகள் நடாத்தப்பட்டன.

### 7.4.2 முன்னேற்ற மீளாய்வு

இது 2 கட்டங்களாக மேற்கொள்ளப்படுகின்றது.

- ❖ மாவட்ட மட்டத்தில்
- ❖ தேசிய மட்டத்தில்

**<u>மாவட்ட மட்டத்திலான முன்னேற்ற மீளாய்வு</u>**

இது 03 மாதங்களுக்கு ஒருமுறை மாவட்ட செயலாளர், மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளர், மாவட்ட முகாமையாளர், தலைமையக முகாமையாளர், முகாமைத்துவப் பணிப்பாளர், வலய முகாமையாளர்கள் சமூக அபிவிருத்தி உதவியாளர்கள் ஆகியோரின்

பங்கேற்புடன் நடாத்தப்பட்டது. இதற்கான நிதி சமூக அபிவிருத்திப் பிரிவினால் விடுவிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் 70 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

**<u>தேசிய மட்டத்திலான முன்னேற்ற மீளாய்வு</u>**

இதுவும் 03 மாதங்களுக்கு ஒருமுறை மாவட்ட சமூக அபிவிருத்தி முகாமையாளர்களை கொழும்புக்கு அழைத்து நடாத்தப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டில் 63 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

- ➢ நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள் - 70
- ➢ செலவாகிய தொகை - 0.32 மில்லியன் ரூபா

## ➢ 8. சமுதாய நிறுவன பிரிவின் செயலாற்றுகை

**மனித மற்றும் பௌதிக வளங்களைப் பலப்படுத்துவதன் மூலம் தனிநபர்களினதும் குடும்பங்களினதும் சமுதாயத்தினதும் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்காக அறிவு, மனப்பாங்கு மற்றும் திறமைகளை விருத்தி செய்து சமுதாய அமைப்புக்கள், பிராதேச அமைப்புக்கள், மாவட்டக் குழுக்கள் என்பவற்றின் ஊடாக வலுவூட்டுதல்.**

மக்களைப் பொருளாதார ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் பலப்படுத்துவதற்காக வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சமுதாய அமைப்புக்களை நிறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில், 2013 ஆம் அண்டின் 01 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் ஊடாகப் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காக, வறுமையை ஒழித்தல், சமூக நீதி உறுதிப்படுத்துதல், தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்துதல் என்பவற்றுக்காக தனிநபர்களையும் குடும்பங்களையும், குழுக்களையும் சமுதாயத்தையும் மையமாகக் கொண்டு அபிவிருத்தி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவது குறிக்கோளாகக் கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும் சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும் என்று திவிநெகும சட்டத்தின் 09 பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்காகவும் அல்லது கிராம உத்தியோகத்தர் பிரிவொன்றின் ஏதேனும் ஒரு பகுதிக்காகவும் அல்லது சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்காக வாழ்வின் எழுச்சி சமுதாய அமைப்புக்கள் தாபிக்கப்படுவது அவசியமாகும்.

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் இப்பிரிவின் பணிகளை நிறைவேற்றும் போது சமுதாயத்துடன் தொடர்புபடுகின்ற அடிமட்டத்திலுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட அலகு இந்த சமுதாய அமைப்புக்களாகும். வாழ்வின் எழுச்சி சமுதாய அமைப்பு என்பது வாழ்வின் எழுச்சிச் சட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள செயற்பாடுகளை மேற்கொள்கின்ற போது சமுதாயத்துடன் தொடர்புபடுகின்ற கிராமிய மட்டத்திலான ஓர் அமைப்பாகும். இவ் அலகை அடிப்படையாகக் கொண்டே வாழ்வின் எழுச்சி பிராந்திய அமைப்புக்களும், வாழ்வின் எழுச்சி மாவட்டக் குழுக்களும், வாழ்வின் எழுச்சி தேசிய சம்மேளனமும் கட்டியெழுப்பப்படுகின்றன.

வாழ்வின் எழுச்சிச் சட்டத்திற்கு இணங்க வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் மக்கள் தொடர்புபடுகின்ற அடிமட்டத்திலுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட அலகான சமுதாய அமைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு மக்களின் முழுமையான

பங்கேற்புடன் அவற்றை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். சமுதாய அமைப்புக்களையும் தாபிப்பதும் அவ்வறுடன் இணைந்த வகையில் பிரதேச அமைப்புக்களைளயும் மாவட்டக் குழுக்களையும் தாபித்து நடாத்தி வருவது அவசியமாகும்.

இந்த அனைத்து அமைப்புக்களையும் தாபித்து இற்றைப்படுத்துவது, நடாத்துவது, முகாமை செய்வது போன்று அவ் அமைப்புக்களின் அனைத்துச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வது ஆகிய பணிகள் சமுதாய அமைப்புக்கள் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

## 8.1 சமுதாய அமைப்புக்கள் பிரிவின் வகிபாகம்

வாழ்வின் எழுச்சி சமுதாய அமைப்புக்களுக்கு வலுவூட்டுவதற்காக சமுதாய அமைப்புக்கள் பிரவின் ஊடாக 2015 ஆம் ஆண்டில் சமுதாய அமைப்புக்கள், பிராந்திய அமைப்புக்கள், மாவட்டக் குழுக்கள் என்பவற்றுக்கு வழக்கறிஞரொருவரின் சட்ட ஆலோசனைகள் பெறப்பட்டு மூன்று யாப்புக்களும் கட்டளை நகல் வரைபுகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

வாழ்வின் எழுச்சி சமுதாய அமைப்புக்களை உருவாக்குதல் மற்றும் ஏற்கனவே உள்ள சமுதாய அமைப்புக்களுக்கு வலுவூட்டுதல் என்பவற்றுக்காக பயிற்சியாளர் குழுவொன்று தெரிவு செய்யப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டதன் பின்னர் அப்பயிற்சியாளர் குழுவின் ஊடாக மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களிலுள்ள உத்தியோகத்தர்களுக்கும் சமூகங்களுக்கும் அறிவூட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பயிற்சியாளர் குழுவுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 5 வாழ்வின் எழுச்சி முகாமையாளர் என்ற அடிப்படையில் சிங்கள மற்றும் தமிழ் மொழி பேசும் உத்தியோகத்தர்கள் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு இரண்டு நாள் பயிற்சிகள் 3 நடாத்தப்பட்டன. இந்நிகழ்ச்சிகள் சிங்கள மொழியில் 2 உம் தமிழ் மொழியில் 1 என்ற வகையில் சிறப்பாக நடாத்தப்பட்டன.

இவற்றில் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் ஊடாக மாவட்ட மற்றும் பிராந்திய மட்டங்களிலுள்ள வாழ்வின் எழுச்சி முகாமையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் மூலம் சமுதாயங்களுக்கு அறிவூட்டுவதற்கான 500 நிகழ்ச்சிகளை நாடு முழுவதிலும் ஏற்பாடு செய்து அனைத்து மாவட்டங்களிலும் பயிற்சி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கு மாவட்டங்களுக்கு நிதிகளை விடுவிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் அடிப்படைக் குறிக்கோள் வினைத்திறனற்றுக் காணப்படும் சமுதாய அமைப்புக்களை வினைத்திறன்மிக்கவையாக மாற்றுவதும் புதிய சமுதாய அமைப்புக்களைப் பலமிக்கதாகக் கட்டியெழுப்புவதும் கிராமிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் சமூக

பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை சமுதாய அமைப்புக்களின் ஊடாக நடைமுறைப்படுத்தி பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டங்கள் வரையில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுத்துவமாகும்.

இந் நிகழ்ச்சிகளின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **இலக்கம்** | **நிகழ்ச்சி** | **நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை** | **செலவு (ரூபா)** |
|---|---|---|---|
| 01. | சேவைப் பிரமாணக் குறிப்பின் நகல் வரைபு தயாரிப்பதற்கான நிகழ்ச்சி | 06. | 18,476.50. |
| 02. | பயிற்றுவிப்பாளர் பயிற்சி நிகழ்ச்சி<br>சிங்களம் மொழிமூலம் - 02<br>தமிழ் மொழிமூலம் 01 | 03. | 5,33,652.50. |
| 03. | மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதy | 116. | 32,03,878.00. |
| மொத்தம் | | 125. | ரூபா.3,756,007.00 |

**அட்டவணை – 14** வாழ்வின் எழுச்சி சமுதாய அமைப்புக்கள் - மாவட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடுகளைச் செலவிடுதல் – 2015

| தொடர் இலக்கம் | மாவட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா.) | செலவாகிய தொகை (ரூபா.) |
|---|---|---|---|
| 1. | கொழும்பு | 6,06,100.00. | - |
| 2. | களுத்துறை | 7,97,500.00. | - |
| 3. | கம்பஹா | 11,80,300.00. | 65,100.00. |
| 4. | காலி | 9,88,900.00. | - |
| 5. | மாத்தறை | 7,97,500.00. | - |
| 6. | அம்பாந்தோட்டை | 6,38,000.00. | - |
| 7. | கண்டி | 12,76,000.00. | - |
| 8. | மாத்தளை | 6,06,100.00. | - |
| 9. | நுவரெலியா | 5,42,300.00. | - |
| 10. | குருநாகல் | 17,22,600.00. | - |
| 11. | புத்தளம் | 6,06,100.00. | 1,96,485.00. |
| 12. | அநுராதபுரம் | 7,65,600.00. | - |
| 13. | பொலனறுவை | 3,19,000.00. | - |
| 14. | பதுளை | 7,01,800.00. | - |
| 15. | மொனராகலை | 4,14,700.00. | - |
| 16. | இரத்தினபுரி | 7,65,600.00. | - |
| 17. | கேகாலை | 6,69,900.00. | - |
| 18. | அம்பாறை | 6,38,000.00. | - |
| 19. | திருகோணமலை | 2,87,100.00. | 2,77,663.50. |
| 20. | மட்டக்களப்பு | 4,46,600.00. | 3,79,193.00. |
| 21. | வவுனியா | 1,59,500.00. | 1,59,000.00. |
| 22. | யாழ்ப்பாணம் | 5,42,300.00. | 3,88,691.50. |
| 23. | மன்னார் | 1,91,400.00. | 1,63,310.00. |
| 24. | முல்லைத்தீவு | 1,59,500.00. | - |
| 25. | கிளிநொச்சி | 1,27,600.00. | - |
| | மொத்தக் கூட்டுத்தொகை | ரூபா. **1,59,50,000.00** | ரூபா. **16,29,443.00.** |

# 9.வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சி

**விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி மற்றும் கைத்தொழில் போன்ற துறைகளில் தயாரிப்புக்களை மேன்படுத்துதல் மற்றும் புதிய தொழில் நுடப்ங்கள் ஊடாக(வாழ்வின் எழுச்சி (சமுர்த்தி) பயனாளிகள் மற்றுும் குறைந்த வருமானமுடையவர்களின் வாழ்க்கை நிலைமையினை உயர்த்துதல்.**

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வருமான மட்டத்தை மேம்படுத்துதல், சுகாதார மற்றும் போஷாக்கு மட்டத்தை அதிகரித்தல், தொழிற்சந்தைக்குப் பொருத்தமான பயிற்சிபெற்ற தொழிலாளர்களை வழங்குவதற்காக தொழிற்பயிற்சி வழங்குதல் என்பவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு 2015 வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு மிக முக்கியமான ஆண்டாக அமைந்தது. திணைக்களச் சட்டங்கள், சுற்றறிக்கைகள் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்கிய முறையில் அபிவிருத்திப் பணிகளை நடைமுறைப்படுத்த வேண்டி ஏற்பட்டமை, வருட ஆரம்பத்தில் ஜனாதிபதித் தேர்தலும் அதன் பின்னர் பொதுத் தேர்தலும் நடாத்தப்பட்டமை என்பவற்றின் காரணமாக அரசாங்கக் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதில் தாக்கங்களை ஏற்படுத்தின.

அதனடிப்படையில், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தினால் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சியை நடைமுறைப்படுத்துவதற்காக 1015 மில்லியன் ரூபா நிதி இப்பிரிவுக்கு வழங்கப்பட்டதுடன் வீடமைப்பு, சமுர்தி அமைச்சினால் (2015 செப்டம்பர் மாதத்தின் பின்னர் சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்பல் அமைச்சு) வறுமை ஒழிப்பு நிகழ்ச்சிக்காகவும் வாழ்வாதார சுழற்சிக் கடன் நிகழ்ச்சிக்கு வழங்கப்பட்ட 1165.8 மில்லியன் ரூபா அடங்கலாகக் கிடைக்கப் பெற்ற மொத்த ஒதுக்கீடு 2180.8 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சி | ரூபா.மில். | 1015.00. |
| 2. வறுமை ஒழிப்பு நிகழ்ச்சி | ரூபா.மில். | 688.80. |
| 3. வாழ்வாதார சுழற்சிக் கடன் நிகழ்ச்சி | ரூபா.மில். | 477.00. |
| **மொத்த நிதி ஒதுக்கீடு** | **ரூபா.மில்.** | **2180.80.** |

எவ்வாறாயினும்,, இந்த அனைத்து ஒதுக்கீடுகள் அனைத்தும் செயற்திட்டங்ளுக்கு வழங்கப்படும் போது நல்லாட்சிமிக்க சமுதாயம் என்ற புதிய அரசாங்கத்தின் தொலைநோக்கைத்



தொனிப்பொருளாகக் கொண்டு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தினாலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் வறுமைச் சுட்டிகளையும் சமுர்திப் பயனாளின் எண்ணிக்கையையும் அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விதத்தில் 149,036 பயனாளிகள் வாழ்வாதார விருத்திக்கான செயற்திட்ட உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

**2015 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சியின் கீழான ஒட்டுமொத்த முன்னேற்றம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01. | வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சி | 1015.00. | 43,924. | 846.49. | 507.04. | 1,19,076. |
| 02. | வறுமை ஒழிப்பு நிகழ்ச்சி (அமைச்சின் நிதி ஒதுக்கீடு) | 688.80. | 21,296. | 571.00. | 137.78. | 21,299. |
| 03. | வாழ்வாதார சுழற்சிக் கடன் நிகழ்ச்சி (அமைச்சின் நிதி ஒதுக்கீடு) | 477.00. | 8661. | 473.22. | - | 8,661. |
| | **மொத்தம்** | 2180.8 | 73,881 | 1890.71 | 644.82 | 149,036 |

**2015 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சியின் கீழான ஒட்டுமொத்த முன்னேற்றம்**



மேற்குறித்த ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி பின்வரும் பிரிவுகளின் கீழ் வாழ்வாதார அபிவிருத்திக்கான செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.



1. விவசாய அபிவிருத்தி
2. விலங்கு வேளாண்மை அபிவிருத்தி
3. மீன்பிடி அபிவிருத்தி
4. சிறய அளவிலான தொழில்முயற்சி அபிவிருத்தி
5. சந்தைப்படுத்தல் அபிவிருத்தி
6. தொழிலை இலக்காகக் கொண்ட தொழிற் பயிற்சி



இந்த வாழ்வாதாரம் நிகழ்ச்சியின் கீழ் மேற்படி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற போது பொருளாதாரப் பங்களிப்பைப் பெற முடியாத நீண்ட கால நோய்களால் அவதிப்படும் குறைந்த வருமானம் பெறுபவர்கள் முதல் திருப்திகரமான வருமான மட்டத்தைக் கொண்ட குறைந்த வருமான பெறுபவர்கள் வரையான பரந்ததொரு பரப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

அதனடிப்படையில், மொத்தமாக 86.73% நிதி முன்னேற்றம் அடையப் பெற்றதுடன் பயனாளிகளுக்காக செயற்திட்டங்கள் நடைமுறைப்படுதப்பட்ட விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

*<u>செயற்திட்டங்களை அளவுகோள்களுக்கு இணங்க வாழ்வாதார நிகழ்ச்சிகளின் பரம்பல்</u>*

| அளவுகோள்கள் | | வழங்கிய செயற்திட்டங்களின் எ.கை | செலவிட்ட தொகை (ரூபா) | பயனாளிகளின் எ.கை |
|---|---|---|---|---|
| அங்கவீனர்கள், விதவைகள், வயதுமுதிர்ந்தவர்கள் மற்றும் சிறுநீரக நோய், புற்றுநோய் போன்ற நாட்பட்ட நோய்களால் அவதிப்படும் வாழ்வின் எழுச்சிப் பயனாளிகளுக்ககாக | குறித்த செயற்திட்டங்களின் செலவில் 90% ஐ வழங்குதலும் 10% ஐப் பயனாளிகள் பொறுப்பேற்றலும் | 28,922. | 844.74. | 104,179 |
| பொருளாதார மற்றும் சமூக ரீதியாகப் பலவீனமான நிலையிலுள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும் மற்றும் அந்த குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும் உள்நாட்டு வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்களுக்குப் பொருத்தமான முறையில் வலுவூட்டுவதற்காக | குறித்த செயற்திட்டச் செலவில் 40% வழங்கப்படுவதுடன் 10% சமுதாயத பங்களிப்புடன் அல்லது சுழற்சி நிதியத்திலிருந்து 60% கடன் வழங்குதல் | 36,209. | 570.57. | 36,107. |
| C செலுத்துவதற்கான ஆற்றல் உள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களுக்காக | குறித்த செயற்திட்டச் செலவில் 50% ஐச் சுழற்சி நிதியத்திலிருந்து செலவிடுதலும்மீதமுள்ள 50% சதவீதத்தைப் பயானிகள் பொறுப்பேற்றலும் அல்லது அந்த 50% சதவீதத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து முழுத் தொகையையும் அறவிடுதல். | 89. | 2.18. | 89. |
| **மொத்தம்** | | **73881** | **1890.71** | **149,036** |



ஒதுக்கப்பட்ட திறைசேரியின் நிதிகளைப் பயன்படுத்தி உச்ச அளவிலான பயனாளிகளை இலக்ககாகக் கொண்டு இந்த நிகழ்ச்சி வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு வாழ்வின் எழுச்சி வங்கிச் சங்க மட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள வாழ்வாதாரச் சுழற்சி நிதியக் கடன் மூலம் வழங்கப்பட்ட சக்கிவாய்ந்த உதவியை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

## 9.1 வாழ்வின் எழுச்சி வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சி

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சிக்காக திணைக்களத்திற்குக் கிடைத்த 1200.00 மில்லியன் ரூபாவில் 1015.00 மில்லியன் ரூபா வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் துறைகக்காக ஒதுக்கப்பட்டதுடன் பின்வருமாறு ஒவ்வொரு நிகழ்சச்சியின் கீழும் வாழ்வாதாரச் செயற்திட்டங்களும் வாழ்வாதார அபிவிருத்திக்கு உதவியாக அமையும் செயற்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டன. அதன் அடிப்படையில்,

| *நிகழ்ச்சி* | *ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு (ரூபா.மில்.)* | *பூர்த்தியடைந்த செயற்திட்டங்களின் எண்ணிக்கை* | *செலவிடப்பட்ட தொகை (ரூபா.மில்.)* | *பயனாளி/ சுழற்சி நிதியப் பங்களிப்பு* | *பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|---|---|---|
| 1.1.வாழ்வாதார அபிவிருத்தி | 706.59. | 35,481. | 601.03. | 482.52. | 35,379. |
| 1.2விசேட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் | 173.94. | 2,230. | 132.19. | 13.22. | 77,484. |
15 வருடங்களில் பங்கு மூலதனத்தின் பரம்பல் 2 ஆம் ஆண்டின் புள்ளிவிபரக் குறிப்புக்கள் (1 ஆம் வரைபுக் குறிப்பு) மூலம் காட்டப்பட்டுள்ளன. ஆரம்ப காலத்தில் பங்கு மூலதனத்தின் வளர்ச்சி 68% ஆகக் காணப்பட்ட போதிலும், கடந்த சில வருடங்களா வளர்ச்சி வீதம் துரிதமாக வீழ்ச்சி கண்டுள்ளது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் பங்கு மூலதனத்தில் வளர்ச்சி அவதானிக்கப்பட்ட போதிலும் வளர்ச்சி வீதம் ஆரம்ப கால வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் குறைந்துள்ளது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் பங்கு மூலதனத்தின் வளர்ச்சியை நோக்குகையில் பங்கு மூலதன வீதங்களில் வீழ்ச்சியை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இந்நிலைமையை மேலும் பகுப்பாய்வு செய்து வங்கிச் சங்கங்களின் நிரந்தர இருப்புக்குப் பங்களிப்புச் செய்யும்

விதத்தில் வங்கி நிதிப் பிரிவின் எதிர்காலத் திட்டங்களைத் தயாரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

2014 ஆம் ஆண்டில் 8,499.5 மில்லியன் ரூபவாகக் காணப்பட்ட பங்கு மூலதனம் 2015 ஆம் ஆண்டின் இறுதியில் 9,927.81 மில்லியன் ரூபாவாக வளர்ச்சியடைந்திருந்தது.

## 1.2 வங்கிச் சங்க வைப்பு நிகழ்ச்சி.

### 3. புள்ளிவிபரக் குறிப்புக்கள்

### வைப்புக்கள்(அங்கத்தவர், அங்கத்தவரல்லாத, குழும, சிறுவர் மற்றும் திரிய மாதா) (2000 – 2015

| **ஆண்டு** | **எண்ணிக்கை** | **வளர்ச்சி** | தொகை (ரூபா) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|---|
| 2000. | 26,45,574. | 12,20,922. | 2,033.45. | 1,264.50. |
| 2001. | 30,35,233. | 3,89,659. | 3,111.16. | 1,077.71. |
| 2002. | 32,96,569. | 2,61,336. | 3,857.10. | 745.94. |
| 2003. | 36,80,786. | 3,84,217. | 4,710.80. | 853.70. |
| 2004. | 39,89,539. | 3,08,753. | 5,751.81. | 1,041.01. |
| 2005. | 42,29,575. | 2,40,036. | 6,824.88. | 1,073.07. |
| 2006. | 43,94,498. | 1,64,923. | 8,131.66. | 1,306.78. |
| 2007. | 46,13,504. | 2,19,006. | 9,875.63. | 1,743.97. |
| 2008. | 50,81,229. | 4,67,725. | 11,356.79. | 1,481.16. |
| 2009. | 51,67,854. | 86,625. | 13,536.65. | 2,179.86. |
| 2010. | 55,05,853. | 3,37,999. | 15,906.77. | 2,370.12. |
| 2011. | 55,24,025. | 18,172. | 18,907.33. | 3,000.56. |
| 2012. | 6,2,06,484 | 6,82,459. | 20799.06. | 1,891.73 |
| 2013. | 63,83,307. | 1,76,823. | 23,916.57. | 3,117.52. |
| 2014. | 68,22,409. | 4,39,102. | 29,436.10. | 5,519.53. |
| 2015. | 70,96,317. | 2,73,908. | 36,528.03. | 7,091.93. |




2015 ஆம் ஆண்டில் 7,091.93 மில்லியன் ரூபா வைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் வங்கிச் சங்க நிகழ்ச்சி தொடர்பில் தொடர்ந்தும் நம்பிக்கை காணப்படுகின்றது. குறிப்பாக 2015 சிங்கள, தமிழ் புது வருடத்திற்கான புது வருட சேமிப்பு நிகழ்ச்சி மற்றும் மார்ச் 8 ஆந் திகதி கொண்டாடப்படும் உலக மகளிர் தினம் என்பவற்றை இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட திரிய மாதா சேமிப்பு விருத்தி நிகழ்ச்சி என்பன இந்த வைப்புக்களின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன. ஏனைய போட்டித் தன்மை கொண்ட நுண் நிதி நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் இந்த வளர்ச்சி போற்றப்பட வேண்டியதாகும்.

## 13.3 சமுதாய வங்கிச் சங்க கடன் நிகழ்ச்சி.

- வாழ்வின் எழுச்சி உதவி பெறுவோர் உள்ளிட்ட குறைந்த வருமானம் பெறுவோரின் முயற்சியாண்மை ஆற்றல்களை அடையாளம் கண்டு, சுய சக்தியின் ஊடாக வறுமையிலிருந்து விடுபடுவதற்குத் தேவையான சூழலைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான நிதி வசதிகள் சமுதாய வங்கிச் சங்கக் கடன் திட்டத்தின் வழங்கப்படுகின்றன.

- அங்கத்தவர்களின் மூலதன நிதியமற்றும் அவசர நிதித் தேவைகளை சமாளிப்பதற்கான விசேட கடன் நிகழ்ச்சிகள் சில அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

- சுயதொழில், மிஹிஜய கடன், கிருள அபிவிருத்தி யோவுன் திரிய, வாழ்வாதாரக் கடன் நிகழ்ச்சிகளின் ஊடாக வருமானம் உழைக்கும் செயற்திட்டங்களுக்கு 100,000/- ரூபா

முதல் 250,000/- ரூபா வரை கடன் விடுவிக்கப்படுகின்றது. விவசாயச் செயற்பாடுகளுக்கான நிதியத்திற்காக 75,000 ரூபாவைக் கடனாகப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. 2010 ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட தேசத்துக்கு மகுடம் அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ் அதுவரையில் வழங்கப்பட்டு வந்த சுயதொழில் கடன் எல்லை 100,000 ரூபாவிலிருந்து 250,000/- ரூபா வரை அதிகரிக்கப்பட்டது.

- வீடுகளை நிர்மாணித்தல், அரைகுறையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடுகளின் வேலைகளைப் பூர்த்தி செய்தல். வீடுகளில் திருத்த வேலைகளை மேற்கொள்ளுதல் போன்ற தேவைகளுக்கு 50,000/- ரூபா வரை கடன் வசதிகளைப் பெற்று, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அங்கத்தவர்களுக்கு உதவி செய்வதற்கு வங்கிச் சங்கம் தயாராக உள்ளது.

- அவசரப் பணத் தேவைகளின் போது வட்டிக்காரர்களின் பிடியிலிருந்து விடுபட்டு மிகவும் இலகுவாக பணத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு நுகர்வோர், அனர்த்த, சுவசக்தி கடன் திட்டத்தின் ஊடாக அங்கத்தவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

- 2010 ஆம் ஆண்டின் இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட விதுலி அத்வல கடன் திட்டத்தின் கீழ் சமுர்திப் பயனாளிகளுக்கும் குறைந்த வருமானம் பெறும் வங்கிச் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கும் தாம் வதியும் வீட்டுக்கு மின் இணைப்பைப் பெறுவதற்காக 30,000/- ரூபா உச்ச எல்லைக்கு உட்பட்ட வகையில் கடன் வழங்கப்படுகின்றது.

- சமுர்தி உதவிபெறுவோர் மற்றும் குறைந்த வருமானம் பெறும் அங்கத்தவர்களுக்கு வருமானம் உழைக்கும் கடன் செயற்திட்டங்களுக்காக 8% வருடாந்த வட்டி வீதத்தில் தற்போது கடன்கள் வழங்கப்படுகின்றன.

- 2015 ஆம் ஆண்டில் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட 100,000 ரூபா திரிய சவிய கடன் திட்டத்தின் கீழ் 4% வீத வட்டி அறவிடப்படுகின்றது.

- 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 462,970 அங்கத்தவர்களுக்கு 26,184.25 மில்லியன் ரூபா கடனாக வழங்கப்பட்டிருந்தது.

## 4. புள்ளிவிபரக் குறிப்புக்கள்
### கடன் வழங்குதல் (1999 - 2015)

| ஆண்டு | எண்ணிக்கை (திரட்டிய) | தொகை (ரூபா. மில்.) | வருடத்தினுள் வழங்கப்பட்ட கடன்கள் (ரூபா. மில்.) |
|---|---|---|---|
| 1999. | 2,09,818. | 966.31. | 966.31. |
| 2000. | 4,81,475. | 2,788.50. | 1,822.19. |
| 2001. | 8,13,334. | 5,552.75. | 2,764.24. |
| 2002. | 10,16,392. | 7,448.08. | 1,895.33. |
| 2003. | 13,40,126. | 10,503.30. | 3,055.22. |
| 2004. | 16,97,866. | 13,977.81. | 3,474.51. |
| 2005. | 21,49,135. | 20,725.03. | 6,747.22. |
| 2006. | 25,27,841. | 26,035.09. | 5,310.06. |
| 2007. | 29,52,840. | 32,843.04. | 6,807.93. |
| 2008. | 34,50,469. | 42,757.37. | 9,914.36. |
| 2009. | 3,7,21,662 | 48,352.73 | 5,595.36. |
| 2010. | 4,1,60,596 | 58,531.61 | 10,178.88. |
| 2011. | 4,6,82,822 | 71,721.04 | 13,189.43. |
| 2012. | 50,85,275. | 87,046.00. | 15,324.96. |
| 2013. | 53,60,115. | 98,056.00. | 11,010.00. |
| 2014. | 63,88,489. | 1,27,805.40. | 29,749.40. |
| 2015. | 68,51,459. | 1,53,989.65. | 26,184.25. |

1999 – 2015 ஆம் ஆண்டு பகுதியில் கடன் வழங்கப்பட்டமைக்கான முன்னெற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.



## 5. புள்ளிவிபரக் குறிப்புக்கள்
## கடன் வகைப்படுத்தல் 2015.12.31 ஆந் திகதியில் கடன்கள்

| கடன் வகை | தொகை (ரூபா.மில்.) | பங்களிப்பு |
|---|---|---|
| சுயதொழில் | 84,900. | 55.13. |
| விவசாயம் | 11,084. | 7.19. |
| ஏனையவை (மிஹிஜய, மீன்பிடி, சுவசக்தி, அனர்த்த, கிருள கடன், யோவுன் திரிய) | 19,323. | 12.55. |
| நுகர்வு | 6,497. | 4.21. |
| ஜனபுபுது | 11,095. | 7.20. |
| வீடமைப்பு | 18,526. | 12.06. |
| திரிய சவிய | 2,564. | 1.66. |
| மொத்தம் | 1,53,989. | 100.00. |

**மேலே குறிப்பிடப்பட்டுள்ள கடன் அட்டவணைக்கு அமைய மேலும் விளக்கப்படுத்துதல்.**




## 13.4 வங்கிச் சங்கங்களின் மேலதிக நிதிய முதலீடு

### (நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள்)

வங்கிச் சங்கங்களின் சொத்துக்களின் மூலம் உச்ச பயனை அடையும் நோக்கில் கடன் விண்ணப்பதாரர்களுக்கு கடன்கள் விடுவிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக நிதியை, தாய்ச் சங்கத்தின் ஊடாக திறைசேரியின் சுற்றறிக்கைக்கு இணங்க அரசாங்க வங்கிகளில் மாத்திரம் முதலீடு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தாய் சங்கங்களுக்கு நிதி ரீதியில் பலம் சேர்ப்பதும் இதன் நோக்கமாகும்.

## 6. புள்ளிவிபரக் குறிப்புக்கள்.

சமுதாய வங்கிச் சங்கங்களிலுள்ள மேலதிக நிதிகளை முதலீடு செய்தல் **(2000 – 2015)**

| ஆண்டு | தொகை (ரூபா. மில்.) | வளர்ச்சி (ரூபா. மில்.) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| 2000. | 1,620. | 1,038. | 178.00. |
| 2001. | 3,175. | 1,555. | 95.99. |
| 2002. | 5,097. | 1,922. | 60.54. |
| 2003. | 5,914. | 817. | 16.03. |
| 2004. | 7,828. | 1,914. | 32.36. |
| 2005. | 7,417. | -411. | (5.25) |
| 2006. | 9,936. | 2,519. | 33.96. |
| 2007. | 13,791. | 3,855. | 38.80. |
| 2008. | 18,833. | 5,042. | 36.56. |
| 2009. | 24,039 | 5,206 | 27.64. |
| 2010. | 27,248 | 3,209 | 13.35. |
| 2011. | 39,048 | 11,800 | 43.31. |
| 2012. | 42,098 | 3,050. | 7.81. |
| 2013. | 55,690 | 13,592. | 32.29. |
| 2014. | 48,309. | (7,381) | (15.27) |
| 2015. | 55,906. | 7,597. | 13.53 |



சமுதாய வங்கிச் சங்கங்களின் மேலதிக நிதி முதலீடு 6 புள்ளிவிபரக் குறிப்பின் மூலம் காட்டப்பட்டுள்ளதுடன், வங்கிச் சங்கங்களின் ஆரம்ப கால முதலீட்டு வளர்ச்சி அதிகரித்துக் காணப்பட்ட போதிலும் பிற்காலங்களில் அது வீழ்ச்சியடைந்துள்ளது. கடன் நிகழ்ச்சியின் விரிவாக்கத்தின் காரணமாக முதலீடு செய்ய முடியுமான நிதியின் அளவு படிப்படியாக மட்டுப்படுத்தப்பட்ட போதிலும் 2015 ஆம் ஆண்டில் வைப்புக்களின் வளர்ச்சியின் காரணமாக முதலீட்டில் வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இது ஒரு சிறந்த அறிகுறியாகும்.

## 13.5 வங்கி நிதி அலுவல்கள் பிரிவின் செயற்பாடுகள்

வங்கி நிதிச் செயற்பாடுகளை நாடு முழுவதிலும் தாபிக்கப்பட்டுள்ள வங்கிச் சங்கங்கள் மற்றும் சமுதாய வங்கிச் சங்க நிதிச் செயற்பாட்டு அலகாகத் தொழிற்படுகையில் அதனுடன் இணைந்த வகையில் பாரியளவிலான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதற்கிணங்க, வங்கி நிதிச் செயற்பாட்டுப் பிரிவின் அனைத்துச் செலவுகளும் அப்பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன் அது தவிர சமுதாய வங்கிகள் மற்றும் சமுதாய வங்கிச் சங்கங்களின் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கும் திருத்த வேலைகளைச் செய்வதற்குமான செலவுகள், கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்கான பிரயாணச் செலவுகள், புலன் விசாரணை உத்தியோகத்தர்களுக்கான பிரயாணச் செலவுகள், வங்கிச் சங்கங்களின் ஆண்டறிக்கை தயாரிப்பதற்கான செலவுகள், பயிற்சிச் செலவுகள் என்பன இதில் உள்ளடங்குகின்றன. மேலும் மீள் நிதியிடல் கடன்களை வங்கிச் சங்கங்களுக்கு வழங்குதல், மிஹிஜய வட்டி மீளளிப்பு, ஊழியர் குழாத்தினருக்கான நிதி வழங்குதல் என்பன வங்கி நிதிப் பிரிவின் வருமானத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. வங்கிச் சங்கங்களுடன் தொடர்புடைய ஊக்குவிப்பு மற்றும் விளம்பரச் செயற்பாடுகளுக்காகவும் இப்பிரிவினால் நிதி செலவிடப்படுகின்றது.

**வங்கி நிதிச் செயற்பாடுகள் பிரிவின் மொத்த வருமானமும் செலவுகளும் கீழே தரப்படுகின்றன.**

**35 புள்ளிவிபரக் குறிப்புக்கள்.**

**2015 ஆம் ஆண்டின் வருமானம் மற்றும் செலவினம்**

| செலவு | ரூபா. மில். | வருமானம் | ரூபா. மில். |
|---|---|---|---|
| கட்டாயச் சேமிப்புக்களுக்காகச் செலுத்திய வட்டி | 763.00. | முதலீட்டின் மூலம் | 955.00. |
| பிரிவின் நிர்வாகச் செலவுகள் | 151.00. | கடன் மூலம் | 116.00. |
| செலவை விஞ்சிய வருமானம் | 157.04. | அறவிட முடியாக் கடன் அறவீடு | 0. |
| | | மேலதிக வருமானங்கள் | 0.4. |
| மொத்தச் செலவினம் | 1,071.04. | மொத்த வருமானம் | 1,071.04. |







வங்கி நிதிச் செயற்பாடுகள் பிரிவு முகாமைத்துவச் செயற்பாடுகளுக்காகப் பின்வரும் உத்தியோகத்தர்களை சேவையில் அமர்த்தி வங்கிச் சங்கங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகளையும், ஊழியர்களுக்கான கடன் நிகழ்ச்சிகளையும் செயலாற்றுகை தொடர்பான செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றது

## 36. புள்ளிவிபரக் குறிப்புக்கள்

**<u>வங்கி நிதி அலுவல்கள் பிரிவின் பதவியணி</u>**

| | பதவி | தற்போது உள்ள எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பணிப்பாளர் | 01. |
| 2. | பி. பணிப்பாளர் | - |
| 3. | உ. பணிப்பாளர் | - |
| 4. | சமுர்த்தி முகாமையாளர் | 29. |
| 5. | ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் | 01. |
| 6. | ஊக்குவிப்பு உத்தியோகத்தர் | 01. |
| 7. | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | 17. |
| 8. | எழுதுநரக்ள் | 01. |
| 9. | கணினித் தரவு உள்ளீட்டாளர்கள் | 0. |
| 10. | தட்டெழுத்தாளர் | 0. |
| 11. | அலுவலக உதவியாளர் | 02. |
| 12. | சாரதி | 0. |
| | மொத்தம் | 52 |

மேலே குறிப்பிட்ட வங்கி நிதிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளைப் பின்வருமாறு விளக்க முடியும்.

## 13.6 சமுதாயவங்கிச் சங்கங்களின் கட்டாயச் சேமிப்புக் கணக்குச் செயற்பாடுகள்.

### 13.6.1 அறிமுகம்.

குறைந்த வருமானம் பெறும் மக்களை அதிகம் அதிகமாகச் சேமிப்பதற்குப் பழக்குதர், அவர்கள் எதிர் கால வளர்ச்சிக்காக கட்டாயச் சேமிப்பு நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. இதன் போது அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவு தொகையின் ஒரு பகுதி கட்டாயச் சேமிப்பாக உதவிபெறுவோர் ஒவ்வொருவருக்காகவும் ஒதுக்கப்படும்.

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தினால் வஙழ்கப்படும் உதவி முத்திரைகள் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைகளின் அடிப்படையில் ஏற்கனவே மாற்றமடைந்துள்ளன. குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை 04 அல்லது அதற்கு மேற்பட்டதாக இருப்பின் 3,500 ரூபாவும், அங்கத்தவர் எண்ணிக்கை 03 ஆக இருப்பின் 2,500 ரூபாவும், அங்கத்தவர் எண்ணிக்கை 3 இற்கு குறைவாக இருப்பின் 1,500 ரூபாவும் வலுவூட்டப்பட்ட குடும்பங்களுக்கு 420 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன. இந்த உதவு தொகைப் பெறுமதியிலிருந்து

கட்டாயச் சேமிப்பாக முறையே300 ரூபா, 200 ரூபா, 100 ரூபா தொகைகள் 2015 ஆம் ஆண்டு முதல் மாதாந்தம் சமுதாய வங்கியில் உள்ள பயனாளிகளின் கணக்குகளில் வைப்புச் செய்யப்படுகின்றன. 1995 ஆம் ஆண்டு முதல் காணப்பட்ட கட்டாயச் சேமிப்புப் பணம் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்படுகின்றது.

1. 1999 நவம்பர் முதல் 2012 ஆம் ஆண்டு வரையில் கட்டாயச் சேமிப்பு நிதிகள், வழங்கப்பட்டுள்ள பிரதேச செயலகங்களினால் ஒவ்வொரு பயனாளியும் உரித்தாகும் 'வங்கிச் சங்கங்களின்' பெயரில் உரிய கட்டாயச் சேமிப்பு நிதிகள் மாதாந்த முதலீட்டுக்காக வங்கி நிதிப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.
2. 1995 முதல் 1999 ஒக்டோபர் மாதம் வரையில் மக்கள் வங்கியிலும் இலங்கை வங்கியிலும் முதலீடு செய்யப்பட்டுள்ள நிதிகளில் (பயனாளிகளுக்கரிய நிதிகளில்) 25% வங்கி நிதிப் பிரிவிற்கு கொண்டு வரப்பட்டு நிதிப் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 2012 மார்ச் மாதம் முதல் வங்கிச் சங்கங்களினால் குறித்த நிதிகள் முதலீடு செய்யப்படுவதனால் தலைமையகத்தினால் கட்டாயச் சேமிப்பு தொடர்பில் முதலீடு செய்யப்படுவதில்லை.

## வங்கி நிதிப் பிரிவில் முதலீடு செய்யப்பட்ட கட்டாயச் சேமிப்பு நிதியங்கள் பின்வருமாறு காணப்பட்டன.

**37. புள்ளிவிபரக் குறிப்புக்கள்**

**முதலீட்டுக்காகக் கிடைக்கப் பெற்ற கட்டாயச் சேமிப்பு (2000 - 2013)**

| ஆண்டு | நிதியம் (ரூபா. மில்.) | வளர்ச்சி (ரூபா. மில்.) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| 2000. | 1,045. | | - |
| 2001. | 2,424. | 1,379. | 131.96. |
| 2002. | 3,852. | 1,428. | 58.91. |
| 2003. | 5,510. | 1,658. | 43.04. |
| 2004. | 6,652. | 1,142. | 20.73. |
| 2005. | 7,349. | 697. | 10.48. |
| 2006. | 8,282. | 933. | 12.70. |
| 2007. | 9,099. | 817. | 9.86. |
| 2008. | 9,960. | 861. | 9.46. |
| 2009. | 10,738. | 778. | 7.81. |
| 2010. | 12,886. | 2,148. | 20.00. |
| 2011. | 13,702. | 816. | 6.33. |
| 2012. | 11,726 | (1,976) | (14.42) |
| 2013. | 12,760. | 1,034. | 8.82. |
| 2014. | - | - | - |




### 13.7 . கட்டாயச் சேமிப்புக்கான வட்டிக் கொடுப்பனவு.

முதலீட்டுக்காக வங்கி நிதிப் பிரிவுக்கு அனுப்பப்படும் கட்டாயச் சேமிப்பு நிதிகள் முதலீட்டுப் பிரிவினால் முதலீடு செய்யப்பட்டு உழைக்கப்படும் வட்டியிலிருந்து ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் ஒவ்வொரு சமுதாய வங்கிச் சங்கத்திற்கும் வட்டிகள் செலுத்தப்படுகின்றன. மேலும், 2006 ஆம் ஆண்டு முதல் வாழ்வின் எழுச்சிச் சங்கங்களை ஊக்கப்படுத்திப் பலப்படுத்தும் நோக்கில் இந்த வட்டிகள் சமுதாய வங்கிச் சங்கங்களின் ஊடாகச் செலுத்தப்படுகின்றன. மேலும் சமுதாய வங்கிச் சங்கங்களுக்கான/ வங்கிச் சங்கங்களுக்கான தொழில்நுட்ப மற்றும் பயனுறுதி வாய்ந்த முறைமைகளை அறிமுகப்படுத்தும் நோக்கில் 2008 ஆம் ஆண்டு முதல் கட்டாயச் சேமிப்புக்கான வட்டிகள் நேரடியாக சமுதாய வங்கிச் சங்கங்களின் நடைமுறைக் கணக்கிற்கு அனுப்பப்படுகின்றன. இதன் மூலம் வங்கி நிதிச் செயற்பாடுகள் பிரிவினால் வருடமொன்றுக்கு 3 மில்லியன் ரூபாவை மேலதிக வருமானமாக உழைக்க முடிந்தது. (பணம் இடையில் நிறுத்தி வைக்கப்படும் காலத்தை ஒரு நாளாகக் குறைத்ததன் மூலம்) கட்டாயச் சேமிப்புக்காகப் பயனாளிகளுக்கு வழங்கப்படும் வட்டி வீதம் போட்டித் தன்மை கொண்ட வர்த்தக வங்கிகளுடன் ஒப்பிடுகையில் உயர் வீதத்தில் காணப்படுகின்றது. இது கணக்குகளை வைத்திருக்கும் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற விசேட சிறப்புரிமையாகும்.

## 38 புள்ளிவிபரக் குறிப்புக்கள்

## கட்டாயச் சேமிப்புக்காக வழங்கப்பட்ட வட்டி (2000 - 2015)

| ஆண்டு | செலுத்தப்பட்ட வட்டி வீதம் % |
|---|---|
| 2000. | 14.0. |
| 2001. | 17.75. |
| 2002. | 13.0. |
| 2003. | 8.1. |
| 2004. | 7.5. |
| 2005. | 7.75. |
| 2006. | 10.06. |
| 2007. | 14.0. |
| 2008. | 14.0. |
| 2009. | 14.0. |
| 2010. | 9.5. |
| 2011. | 7.1. |
| 2012. | 7.5. |
| 2013. | 6.5. |
| 2014. | 6.0. |
| 2015. | 6.0. |

**அவசியம் சேமிப்புக்காக வழங்கப்பட்ட வட்டி**



2015 ஆம் ஆண்டில் நிதிச் சந்தையில் வட்டி வீதம் குறைவாகக் காணப்பட்ட போதிலும் கட்டாயச் சேமிப்புக்கு 6.0 சதவீத வட்டியை வங்கிச் சங்கங்களுக்கு வழங்க முடிந்தமை பாராட்டத்தக்கதாகும்.

## 13.8 கடன் திட்டம்

வங்கி நிதிச் செயற்பாடுகள் பிரிவு, வங்கிச் சங்கங்களினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கடன் திட்டங்களுக்குத் தேவையான நிதிகளை வழங்குகின்ற அதேவேளை, வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்கள ஊழியர்களுக்காகவும் பல கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இவ்வாறு வங்கி நிதிச் செயற்பாடுகள் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படும் கடன் திட்டங்களைப் பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

2.2.1 பயனாளிகளுக்கான கடன் திட்டம்
2.2.2 ஊழிர்களுக்கான கடன் திட்டம்

### 13.8.1.பயனாளிகளுக்கான கடன் திட்டம்

**மீள்நிதியிடல் கடன் திட்டம்.**

வங்கிச் சங்கங்கள் கடன் வழங்குவதற்கு தம்மால் சேகரிக்கப்பட்ட வைப்புக்களையே பயன்படுத்துகின்றன. அதற்காக மொத்த வைப்புக்களில் 80% ஐ மாத்திரமே பயன்படுத்துவதற்கு வங்கிச் சங்கங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கு அப்பால் வழங்கப்படும் கடன்கள் விடயத்தில் ஏற்படும் நிதி நெருக்கடிகளை ஈடுசெய்வதற்காக வங்கி நிதிச் செயற்பாடுகள் பிரிவினால் மீள் நிதியிடல் வசதிகளை வங்கி வட்டி வீதத்தை விடக் குறைந்த வட்டி வீதத்தில் வங்கிச் சங்கங்களுக்கு வழங்குகின்றது. சுயதொழில், விவசாயம், மீன்பிடி, விலங்கு வேளாண்மை, வியாபாரம் போன்ற வருமானம் உழைக்கும் செயற்திட்டங்களுக்கு கடன்கள் வழங்கப்படுகின்றன. மீள் நிதியிடல் கடன் திட்டங்கள், சமுதாயச் சங்கங்களின் ஊடாக வழங்கப்படுவதுடன் வங்கி நிதிச் செயற்பாடுகள் பிரிவு 4% வருடாந்த வட்டி வீதத்தில் சமுதாயக் கழகங்களுக்கு கடன்களை வழங்குகின்றது. சமுதாயக் கழகங்கள் சமுதாய வங்கிச் சங்கங்களுக்கு 5% வட்டிக்கு மீள்நிதியிடல் கடன் நிதிகளை வழங்குகின்றது.

## 39. புள்ளிவிபரக் குறிப்புக்கள்

**மீள்நிதியிடல் கடன் நிகழ்ச்சியின் முன்னேற்றம் (1999 - 2015)**

| ஆண்டு | கடன் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை | விடுவித்த தொகை (ரூ.மி.) | அறவிடப்படும் சதவீதம் (%) |
|---|---|---|---|---|
| 1999. | 11. | 523. | 3.00. | 100. |
| 2000. | 175. | 5,578. | 52.00. | 92. |
| 2001. | 324. | 12,588. | 117.00. | 101. |
| 2002. | 472. | 18,400. | 177.00. | 100. |
| 2003. | 637. | 23,223. | 233.00. | 100. |
| 2004. | 786. | 27,605. | 283.00. | 101. |
| 2005. | 849. | 30,351. | 315.80. | 102. |
| 2006. | 971. | 36,155. | 389.00. | 100. |
| 2007. | 1,040. | 40,008. | 450.00. | 100. |
| 2008. | 1,072. | 42,631. | 499.71. | 100. |
| 2009. | 1,097. | 44,180. | 523.58. | 100. |
| 2010. | 1,110. | 45,284. | 571.11. | 91. |
| 2011. | 1,112. | 45,399. | 581.42. | 95. |
| 2012. | 1,132. | 46,145. | 613.12. | 100. |
| 2013. | 1,163. | 48,460. | 710.91. | 100. |
| 2014. | 1,175. | 49,332. | 761.64. | 100. |
| 2015. | 1,179. | 49,798. | 797.88. | 100. |

<u>09.வரைபுக் குறிப்பு</u>

**மீள்நிதியிடல் கடன் நிகழ்ச்சியின முன்னேற்றம்**



2014 ஆம் ஆண்டில் சஹன அருண நிகழ்ச்சியை நடைமுறைப்படுத்துகின்ற போது கடன் வழங்குவதற்குப் போதிய பணத்தைக் கொண்டிராத சமுதாய வங்கிகளுக்கு, வங்கி நிதிப் பிரிவினால் உழைக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி மீள்நிதியிடல் கடன்கள் வழங்கப்பட்டன. ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்குவதற்குப் போதிய பணத்தைக் கொண்டிராத சமுதாய வங்கிச் சங்கங்களுக்கு வங்கி நிதிப் பிரிவினால் உழைக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி மீள்நிதியிடல் கடன்கள் வழங்கப்பட்டன.

2015 ஆம் ஆண்டில் திரிய சவிய நிகழ்ச்சிக்கு கடன் வழங்குகின்ற போது, போதிய பணத்தைக் கொண்டிராத சமுதாய வங்கிகளுக்கு, மேலே கூறப்பட்டவாறே வங்கி நிதிப் பிரிவினால் உழைக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி மீள்நிதியிடல் கடன்கள் வழங்கப்பட்டன.

**40 வரைபுக் குறிப்பு -மீள்நிதியிடல் கடன் நிகழ்ச்சியின் முன்னேற்றம் (2014 - 2015)**

| ஆண்டு | உரிய கடன் வகை | கடன்களின் எண்ணிக்கை (வங்கி) | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 2014. | சஹன அருண – மீள்நிதியிடல் | 18. | 8,25,00,000. |
| 2014. | மோட்டார் சைக்கிள் மீள்நிதியிடல் | 02. | 50,50,000. |
| 2015. | திரிய சவிய மீள்நிதியிடல் | 36. | 55,80,77,600. |

## 13.9 மிஹிஜய ( 8%, 10%) சலுகை வட்டி மீளளிப்பு

**சபத, ஜனபுபுது, வீட்டுக் கடன் நிகழ்ச்சி** 2010 ஆம் ஆண்டில் இடைநிறுத்தப்பட்டதுடன் இக்கடன் திட்டத்திற்குப் பதிலாக சுயதொழில், பியச மற்றும் மிஹிஜய நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.இதனடிப்படையில் சமுதாய வங்கிச் சங்கங்களின் வருமானம் உழைக்கும் செயற்திட்டங்கள் அனைத்துக்கும் சலுகை வட்டி மீள்நிதியிடல் வங்கி நிதிப் பிரிவுவினால் வழங்கப்படுகின்றது. வங்கிச் சங்கங்களின் நிதி நட்டங்களைக் குறைப்பதற்காகச் சலுகைக் கடன் வட்டி வழங்குவது இதன் குறிக்கோளாகும். 2013.12.31 ஆந் திகதியின் பின்னர் அறவிடப்பட்ட வட்டிகளுக்கு சலுகை வட்டி மீளளிப்புச் செய்யப்படவில்லை. 2013.12.31 ஆந் திகதி வரை அறவிடப்பட்ட வட்டிகளுக்காக மாத்திரம் இந்த வருடத்திலும் வட்டிச் சலுகை வழங்கப்பட்டது.

## 41 புள்ளிவிபரக் குறிப்புக்கள்

### வங்கிச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட சலுகை வட்டிகள் ( 2009 - 2015)

| வருடம் | தொகை (ரூபா) |
|---|---|
| 2009. | 2,50,143.00. |
| 2010. | 3,1,08,269.00 |
| 2011. | 2,4,96,830.25 |
| 2012. | 23,5,66,040.32 |
| 2013. | 91,7,06,854.90 |
| 2014. | 14,76,85,633.11. |
| 2015. | 24,01,79,298.54. |




## 13.10 விதுலி அத்வல கடன் நிகழ்ச்சி

அனைவருக்கும் மின் விநியோகம் வழங்கும் நோக்கில் திவிநெகும பயனாளிகளுக்கும் குறைந்த வருமான பெறும் குடும்ப அலகுகளுக்கும் மின் இணைப்பு வழங்குவதற்காக மின்சக்தி எரிசக்தி அமைச்சினால் விதுலி அத்வல கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சிக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சும் வழிகாட்டுகின்றன. தற்போது அது சமூக வலுவூட்டல், நலனோம்பல் அமைச்சு, இலங்கை சமுர்தி அதிகாரசபை (தற்போதைய வாழ்வின் எழுச்சித் திணைக்களம்), இலங்கை மின்சார சபை என்பன இதற்கு செயலூக்கமிக்க பங்களிப்பை வழங்கி வருகின்றன.

நாடு முழுவதிலுமுள்ள வாழ்வின் எழுச்சி சமுதாய வங்கி வலையமைப்பின் ஊடாக ஒரே தடவையில் இந்த சலுகை அடிப்படையிலான “விதுலி அத்வல” கடன்

நிகழ்ச்சியை நடைமுறைப்படுத்துவதற்கான நிதி வங்கி நிதிப் பிரிவினால் வழங்கப்படுகின்றது.

**இந்நிகழ்ச்சியின் மூலம் பின்வரும் பயன்கள் எதிர்க்கப்படுகின்றன:**

I. குறைந்த வருமானம் பெறுபவர்கள் கொண்டு நடாத்தும் அல்லது கொண்டு நடாத்துவதற்கு எதிர்பார்க்கின்ற சிறு கைத்தொழில்களையும் விற்பனை அபிவிருத்தி நிகழ்ச்சிகளையும் வினைத்திறன்மிக்கதாக மாற்றி பொருளாதார ஆற்றலை மேம்படுத்துவதாகும்.

II. வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சிக்கான கடன் கோரிக்கை அதிகரித்து அங்கத்தவர்கள் சமுதாய வங்கிச் சங்கங்களில் சேர்ந்து வைப்புகள் அதிகரிக்கும்.

III. வங்கி நிதிச் செயற்பாடுகள் பிரிவினால் வழங்கப்படும் சேவைக் கட்டணங்களின் காரணமாக வங்கிச் சங்கங்களின் வருமான ஆற்றலை மேம்படுத்தக்கூடியதாக உள்ளமை

IV. சமுதாய வங்கிச் சங்கங்களின் நிதி ஆற்றல், வினைத்திறன், நம்பிக்கை என்பன மென்மேலும் வளர்ச்சியடைதல்,

இந்த விதுலி அத்வல கடன் நிகழ்ச்சியின் கீழ் பயனாளிகளுக்கு அதிகபட்சக் கடன் 30,000/= ரூபாவாகும். 60 மாதங்களில் 12% வருடாந்த வட்டியுடன் கடன் தொகை தவணைகளாக அறவிடப்படும்.

இதற்கு மின்சார சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கடன் விண்ணப்பப்படிவத்தை உரிய நுகர்வோர் சேவை நிலையத்திலிருந்து பெற்று 05 ஆம் இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தலுக்கு இணங்க தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பங்களை முறையே வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர், வாழ்வின் எழுச்சி முகாமையாளர், பிரதேச செயலாளர் ஆகியோர் சிபாரிசு செய்து மின்சார சபைக்குச் சமர்ப்பித்ததன் பின்னர் மின் இணைப்பு வழங்கப்படும்.

2010 ஆம் ஆண்டில் இந்த விதுலி அத்வல கடன் நிகழ்ச்சியுடன் தொடர்புடைய இருதரப்பு ஒப்பந்தம் இலங்கை சமுர்தி அதிகாரசபைக்கும் (தற்போதைய வாழ்வின் எழுச்சித் திணைக்களம்) இலங்கை மின்சார சபைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டதுடன் அவ் ஆண்டில் கடன்கள் எதுவும் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை.

2014 ஆம் ஆண்டிலும் இந்த விதுலி அத்வல கடன் நிகழ்ச்சி தொடர்பான இருதரப்பு ஒப்பந்தம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்திற்கும் இலங்கை மின்சார சபைக்கும் கைச்சாத்திடப்பட்டது.

## 42 புள்ளிவிபரக் குறிப்புக்கள்

## விதுலி அத்வல கடன் நிகழ்ச்சியின் முன்னேற்றம் (2011 – 2015)

| ஆண்டு | வங்கி நிதிப் பிரிவுவினால் மின்சார சபைக்கு | | | மின்சார சபையினால் பயனாளிகளுக்கு/குறைந்த வருமானம் பெறுவோருக்கு | |
|---|---|---|---|---|---|
| | வழங்கப்பட்டுள்ள | | | வழங்கப்பட்டுள்ள | |
| | கடன்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா.மில்.) | வெளியிலுள்ள தொகை (ரூபா.மில்.) | கடன்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா.மில்.) |
| 2011. | 02. | 350. | 335.08. | 20694. | 354. |
| 2012. | 07. | 747. | 675.32. | 44932. | 853. |
| 2013. | 09. | 1080. | 861.67. | 64520. | 1237. |
| 2014. | 13. | 1537. | 1106.18. | 80153. | 1537. |
| 2015. | 15. | 1782. | 1036.93. | 97831. | 1899. |

## 13.11 வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊழியர் குழாத்திற்கான கடன் வழங்கல் திட்டம்

### 13.11.1 நுகர்வோர் கடன் வழங்கல் திட்டம்.

2004 பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்ச்சி 2008 வரையில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் 9% வருடாந்த வட்டி வீதத்தில் 50,000 ரூபா கடன் வழங்கப்பட்டது. இந்த கடன் திட்டத்தின் மூலம் அனைத்து ஊழியர்களும் பயனடைய முடியும். கடனை மீளச் செலுத்துவதற்கான காலம் 60 மாதங்களாகும். 50,000/- ஆகக் காணப்பட்ட கடன் தொகை 2010.10.18 ஆந் திகதி முதல் 100,000/- ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. 2013.12.18 ஆந் திகதி முதல் இந்நிகழ்ச்சி மாவட்டங்களுக்குப் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

2015.01.19 ஆந் திகதி முதல் இந்த கடன் வழங்கல் நிறுத்தப்பட்டுள்ளதுடன், அறவிடும் செயற்பாடுகள் மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

## 43. புள்ளிவிபரக் குறிப்புக்கள்

## 2015.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான ஊழியர் நுகர்வுக் கடன்

**(திரட்டிய)**

| வழங்கி கடன்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா.மி.) |
|---|---|
| 28308. | 2001.00. |

### 13.11.2 ஊழியர்களுக்கான வீடமைப்புக் கடன் திட்டம்

2004 ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்ச்சி வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் நிரந்தர ஊழியர்களுக்காக சமுதாய வங்கிப் பிரிவின் முதலீடுகளின் மூலம் உழைக்கப்பட்ட வருமானத்தின் மூலம் நிதி ஒதுக்கப்பட்டது. கடன் நிகழ்ச்சியின் கீழ் காணியொன்றைக் கொள்வனவு செய்வதல், புதிய வீடொன்றை நிர்மாணித்தல், வீடொன்றைக் கொள்வனவு செய்தல், வீடொன்றுக்கு ஒரு பகுதியைச் சேர்த்தல் அல்லது விரிவுபடுத்துதல் என்பவற்றுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன. கடனை மீளச் செலுத்துவதற்கான காலம் 15 வருடங்கள் வரை நீடிக்கப்பட்டுள்ளது. வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழ் 2015.12.31 ஆந் திகதி வரையில் வழங்கப்பட்டுள்ள கடன்களின் விபரம் பின்வருமாறு காணப்பட்டது. 2010.01.01 ஆந் திகதி முதல் உரிய வட்டி வீதம் 10% வரை குறைக்கப்பட்டுள்ளதுடன், 2014.11.01 ஆந் திகதி முதல் இக்கடன்களை அறவிடும் செயற்பாடுகள் மாவட்ட மட்டத்திற்குப் பரவலாக்கப்பட்டுள்ளது. 2015.01.19 ஆந் திகதி முதல் இந்த கடன் வழங்கல் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

**44. புள்ளிவிபரக் குறிப்புக்கள்**

**2015.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான கடன்கள் (திரட்டிய)**

| வழங்கி கடன்களின் எண்ணிக்கை | தொகை ரூபா.மில்லியன் |
|---|---|
| 2129. | 905.08. |

### 2.2.2.3 மோட்டார் சைக்கிள் கடன் வழங்கல் திட்டம்.

2004 நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த கடன் நிகழ்ச்சிக்காக, வங்கி நிதிப் பிரிவின் முதலிட்டின் மூலம் உழைக்கப்பட்ட வருமானத்தில் நிதி ஒதுக்கப்பட்டது. வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் நிரந்தர ஊழியர்களுக்கு மாத்திரம் இந்த கடன் நிகழ்ச்சி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 10% வருடாந்த வட்டி வீதத்தின் கீழ் 150,000 ரூபா உச்ச எல்லைக்கு உட்பட்ட வகையில் 60 மாதாந்தத் தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் மோட்டார் சைக்கிள் கடன்கள் வழங்கப்பட்டன. 2014.12.31 ஆந் திகதியின் பின்னர் மோட்டார் சைக்கிள் கடன்களை மாவட்ட மட்டத்தில்

வழங்குவதற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் 2014.11.01 ஆந் திகதி முதல் இந்தக் கடன்கள அறிவிடும் பணியும் மாவட்ட மட்டத்திற்குப் பரவலாக்கப்பட்டுள்ளது.. 2015.01.19 ஆந் திகதி முதல் இந்த கடன் வழங்கல் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

**16. புள்ளிவிபரக் குறிப்புக்கள்**

**2015.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான மோட்டார் சைக்கிள் கடன் (திரட்டிய) 45**

| **வழங்கி கடன்களின் எண்ணிக்கை** | தொகை ரூபா.மில். |
|---|---|
| 4067. | 368.03. |

## 13.12 ஊழியர் உடல் விபத்துக் காப்புறுதி

சமுதாய வங்கிச் சங்கங்களுக்குச் சொந்தமான பணத்தை வங்கிச் சங்கங்களிலிருந்து வர்த்தக வங்கிகளில் வைப்புச் செய்வதற்குக் கொண்டு செல்லும் போதும் வர்த்தக வங்கிகளிலிருந்து சமுதாய வங்கிச் சங்கங்களுக்கு பணத்தைக் கொண்டு வரும் போதும் நிகழும் கொள்ளையின் போது வங்கி ஊழியர்களுக்கு ஏற்படும் உடல் ரீதியான விபத்துக்களுக்காக இந்நிகழ்ச்சியின் கீழ் நட்டஈடு வழங்கப்படுகின்றது. 2015 ஒக்டோபர் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட உடல் விபத்துக் காப்புறுதி நிதியத்திற்கு ஒவ்வொரு வங்கிச் சங்கமும் வருடமொன்றுக்கு 1,000/- தவணைப் பணம் செலுத்தி காப்புறுதி செய்வது அவசியமாகும்.
இதன் கீழ் பெற்றுக் கொள்ள முடியுமான ஆகக் கூடிய நட்டஈடு 2015.08.19 ஆந் திகதி முதல் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் 300.000 ஆகும்.

2014 ஆம் ஆண்டில் இந்நிகழ்ச்சியின் கீழ் வங்கிச் சங்கங்களிடமிருந்து காப்புறுதித் தவணைப் பணமாக 808,400/ ரூபா கிடைத்துள்ளதுடன் 2015 ஆம் ஆண்டில் 1,295,480.00 கிடைத்துள்ளது. உடல் விபத்துக்களுக்கான நட்டடாக 2015.12.31 ஆந் திகதி வரையில் 1,786,270/- ரூபா செலுத்தப்பட்டுள்ளது.

## 13.13 வாழ்வின் எழுச்சி வங்கிச் சங்க கையிருப்பிலுள்ள காசுக் காப்புறுதி

**13.13.1** வாழ்வின் எழுச்சி சமுதாய வங்கிச் சங்கங்களின் கையிருப்பிலுள்ள காசு மற்றும் அவ்வங்கிகளிலிருந்து வர்த்தக வங்கிகளுக்குக் காசைக் கொண்டு செல்கின்ற போது ஏற்படும் களவு மற்றும் கொள்ளைகளினால் ஏற்படும் காசு இழப்புக்கள் இதன் மூலம் ஈடு செய்யப்படும்.

**13.13.2** வங்கிச் சங்கங்களின் தாய்ச் சங்கங்களின் நாளாந்த திரவத்தன்மைத் தேவைகளைக் கவனத்திற் கொண்டு இந்த காப்புறுதித் திட்டம் தொடர்பில் வங்கி நிதிப் பிரிவில் விபரங்களைக் கேட்டறிய முடியும்.. அதற்காக வருடாந்த

தவணைப் பணத்தை வங்கி நிதிப் பிரிவுக்கு அனுப்பு காப்புறுதியைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன் முன்னேற்றம் 2015.12.31 ஆந் திகதி வரையில் 1073 வங்கிச் சங்கங்களும் 270 தாய்ச் சங்கங்களும் இந்தக் காப்புறுதிப் பூட்கையைப் பெற்றிருந்தன.

**13.13.3** ஊழியர் உடல் விபத்து மற்றும் கையிருப்பிலுள்ள காசுக் காப்புறுதி தொடர்பில் 2015 ஆம் ஆண்டு வரையில் வெளியிடப்பட்டுள்ள அனைத்துச் சுற்றறிக்கைகளையும் திருத்தங்களையும் இரத்துச் செய்து 2015.08.14 ஆந் திகதி புதிய சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 2015 ஆம் ஆண்டில் கையிருப்பிலுள்ள காசுக் காப்புறுதி எல்லையை 10 இலட்சத்திலிருந்து 20 இலட்சம் வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**13.13.4** வங்கிச் சங்கங்கள் (உடல் விபத்துக் காப்புறுதித் பணமும் அடங்கலாக) மற்றும் தாய்ச் சங்கங்களால் அனுப்பப்பட்ட தவணைப் பணம், வங்கி நிதிப் பிரிவு வினால் உருவாக்கப்பட்டுள்ள நிதியத்தில் வைப்புச் செய்யப்பட்டு பயனுறுதி வாய்ந்த முறையில் முதலீடு செய்து நிதியம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**13.13.5** 2015.12.31 ஆந் திகதி வரையில் கையிருப்பிலுள்ள காசுக் காப்புறுதி நட்டஈடாக 3,778,218.91 ரூபா (திரட்டாக) செலுத்தப்பட்டுள்ளது.

## 13.14 வங்கிச் சங்கங்களினதும், தாய்ச் சங்கங்களினதும் வெளிவாரியான கணக்காய்வு

வாழ்வின் எழுச்சி வங்கிச் சங்கங்கள் மற்றும் வங்கிக் கழகங்களின் செயற்பாடுகள் ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் அதாவது ஜனவரி 1 ஆந் திகதி முதல் டிசம்பர் 31 ஆந் திகதி வரையான காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் தொடர்பில் கணக்காய்வு செய்து வருடாந்த கணக்காய்வு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் ஆரம்ப காலத்தில் அவ் அறிக்கையைத் தயாரிக்கும் அதிகாரம் பிரதேச செயலகங்களின் கணக்காளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் அப்பணி வெற்றிகரமாக மேற்கொள்ளப்படாமையினால் அவ்வாறு அறிக்கைகள் தயாரிக்கப்படா வருடங்களுக்கான கணக்காய்வு அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக அரசாங்க/அரசாங்க உதவி பெறும் நிறுவனங்களின் கணக்காளர்கள் வெளிவாரியான கணக்காய்வு உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டு அவர்களின் சேவைகள் பெறப்பட்டன.

2006 ஆம் ஆண்டின் பின்னர் இன்று வரையில்உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, கணக்காய்வுகளை மேற்கொண்டு நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து கணக்காய்வுக் கருத்துக்களுடன் சமுதாய வங்கிப் பிரிவுக்கு வழங்குகின்றது.

## 13.14 வங்கி மேற்பார்வை அலகு.

வங்கி நிதிச் செயற்பாடுகள் பிரிினால் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்க வாழ்வின் எழுச்சி சமுதாய

வங்கிச் சங்கங்களினதும் வங்கிக் கழகங்களினதும் தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை மேற்பார்வை செய்து வழிகாட்டுவதையும் ஒட்டுமொத்த வங்கிச் சங்க முறைமையினதும் வினைத்திறனையும் பயனுறுதித் தன்மையையும் மேம்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டு “வங்கி மேற்பார்வை அலகு” சமுதாய வங்கிப் பிரிவினுள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் அப்பிரிவினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

* வாழ்வின் எழுச்சி வங்கிகள் மற்றும் வங்கிச் கழகங்களின் கணக்காய்வுச் சோதனைகள் கணக்காய்வு அறிக்கைகள் மூலமும் வேறு விதத்திலும் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுக்கு இணங்க பிந்திய விபரம் சேகரித்தல், அவற்றின் அடிப்படையில் தெரிய வரும் குறைபாடுகளைச் சரிசெய்தல் மற்றும் உள்ளகக் கணக்காய்வு, சட்ட விசாரணைகள் மற்றும் குறித்த பிரிவுகளுக்குத் தேவையான தகவல்களை வழங்கி தேவையான ஒருங்கிணைப்பை மேற்கொள்கின்றது.

* வாழ்வின் எழுச்சி சமுதாய வங்கி மற்றும் வங்கிக் கழகங்களின் கணக்கீட்டுச் செயற்பாடுகளிலும் தாபனச் செயற்பாடுகளிலும் நாளாந்தச் செயற்பாடுகளிலும் காணப்படும் குறைபாடுகளைச் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுத்து தேவையான அறிவுறுத்தல்களை வழங்கி வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றது.
* மாதாந்த தனித்தனியான மீதிகளைச் சமப்படுத்தும் செயற்பாடுகள், வங்கி நடமாடும் சேவை, வாழ்வின் எழுச்சி வங்கிகளை ஒன்றிணைத்தல், இயற்கை அனர்த்தங்களின் காரணமாக வங்கிச் சங்கங்களுக்கு ஏற்படும் சேதங்களின் காரணமாக வங்கிச் செயற்பாடுகளை மீண்டும் வழமைக்கு கொண்டு வருவதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
* வாழ்வின் எழுச்சி சமுதாய வங்கிகளிலும் வங்கிக் கழகங்களிலும் காலத்துக் காலம் ஏற்படும் பல்வேறுபட்ட தேவைப்பாடுகளின் அடிப்படையில் தேவையான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் வழங்குவதன் ஊடாக வங்கிச் சங்கங்ளினதும் வங்கிக் கழகங்களினதும் பயனுறுதித் தன்மையை மேம்படுத்துவதற்குப் பங்களிப்பு வழங்குதல் “வங்கி/வங்கிக் கழக வழிகாட்டல் மற்றும் மேற்பார்வைப் பிரிவினால்’ மேற்கொள்ளப்படுகின்றது.

* தொடர்ச்சியான மேற்பார்வை, திடீரென ஏற்படும் தேவைகளுக்கு உதவி வழங்குதல், ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் என்பவற்றை இலகுபடுத்துவதற்காக வங்கித் தாய்ச் சங்க வழிகாட்டல் மேற்பார்வைப் பிரிவுகள் 25 மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. 2015 ஆம்

ஆண்டில் வங்கி/வங்கிச் சங்க வழிகாட்டல் மேற்பார்வை அலகு தேசிய மட்டத்தில் 3 முன்னேற்ற மீளாய்வுகளை நடாத்தியது. அதன் போது அடையாளம் காணப்பட்ட அதிகமான பிரச்சினைகளுக்கு அவ் ஆண்டிலேயே தீர்வுகள் காணப்பட்டன.

## 13.15 பயிற்சி அலுவல்கள்

1074 சமுர்தி வங்கிகளைக் கொண்ட வலையமைப்பினதும் 332 தாய்ச் சங்கங்களினதும் ஊழியர்களுக்கு வங்கி அலுவல்கள் மற்றும் ஏனைய பாடங்களுடன் தொடர்புடைய பயிற்சிகளை வழங்கும் செயற்பாடுகளை திணைக்களத்தின் பயிற்சிப் பிரிவு ஒருங்கிணைப்புச் செய்கின்றது.
வாடிக்கையாளர்களுக்கு மிகவும் வினைத்திறன்மிக்கதும் பயனுறுதிவாய்ந்ததுமான சேவையினை வழங்குவதற்காக ஊழியர்களிடத்தில் அறிவையும் திறன்களையும் சிறந்த மனப்பாங்குகளையும் விருத்தி செய்வது இவ் அலகின் பொறுப்பாகும்.

அதனடிப்படையில், வங்கியின் செயற்பாடுகள் தொடர்பான தெளிவை வழங்கும் வங்கி அலுவலகள் மற்றும் கணக்கீட்டுச் செயன்முறைகள் தொடர்பான அடிப்படைப் பயிற்சிநெறியைப் பயில்வதற்கான வாய்ப்பு ஒவ்வொரு வங்கி உத்தியோகத்தருக்கும் வழங்கப்படுகின்றது. இது தவிர, தாய்ச் சங்க அலுவல்கள் மற்றும் தாய்ச் சங்கங்களின் கணக்கீட்டுச் செயற்பாடுகள் தொடர்பில் பயிற்சிபெறாத தாய்ச் சங்க ஊழியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், இலங்கை வங்கியாளர் பயிற்சி நிறுவனத்தின் ஊடாகப் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதுடன் 2015 ஆம் ஆண்டினுள் வங்கி உத்தியோகத்தர்களுக்கான வழிகாட்டல் மற்றும் மேற்பார்வைப் பயிற்சி நிகழ்ச்சியொன்றும் நடாத்தப்பட்டது. அதன் கீழ் 61 முகாமையாளர்கள் பயிற்சி பெற்றனர்.2015 ஆம் ஆண்டில் நுண் நிதிச் சான்றிதழ் பாடநெறியைப் பூர்த்தி செய்த
உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 489 ஆகும்.

## 13.17 முகாமைத்துவத் தகவல் அலகு

1074 சமுதாய வங்கிச் சங்கங்ங்களின் தகவல் முகாமை, வங்கி நிதிச் செயற்பாடுகள் பிரிவின் தகவல் அலகினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதனடிப்படையில், ஒவ்வொரு வங்கிச் சங்கமும் வங்கிக் கழகங்களும் மாதாந்தம் தமது வங்கிச் சங்கங்களின் முன்னேற்றத்தை, வழங்கப்பட்டுள்ள படிவங்கள் ஊடாக தகவல் மற்றும் முகாமைத்துவ அலகிற்கு அறிவிக்க வேண்டும். அத்தரவுகளைத் தயார்படுத்தி வங்கிச் சங்கங்ளின் தற்போதைய நிலை தொடர்பாகப் பகுப்பாய்வு செய்து தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கும் வங்கிச் சங்கங்களின் முன்னேற்றத்தைப் பாராட்டுவதற்குத் தேவையான வீதப் பகுப்பாய்வுகளை உருவாக்குவதற்கும் அதனடிப்படையில் வங்கிச் சங்கங்களைப் பாராட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் கணினித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி

வங்கிச் சங்கங்களினதும் வங்கிக் கழகங்களினதும் தகவல்களை வங்கி நிதிச் செயற்பாடுகள் பிரிவுக்குப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சமுதாய வங்கிச் சங்கங்களைக் கணினிமயப்படுத்தும் செயற்பாடுகள் வெற்றியளித்ததைத் தொடர்ந்து மேலும் பயனுறுதி வாய்ந்ததும் வினைத்திறன்மிக்கதுமான முறையில் வங்கிச் சங்கங்களின் தற்போதைய நிலையைப் பகுப்பாய்வு செய்வதற்கும் பாராட்டும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

2015 ஆம் ஆண்டில் தேசிய மட்டத்திலான 21 வங்கிச் சங்க முன்னேற்ற மீளாய்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

## 13.18 வைப்பு ஊக்குவிப்பு அலகு.

வங்கித் துறையில் ஒரு முக்கியமான பிரிவான வைப்புக்களை ஊக்குவித்தலை, சமுதாய வங்கிச் சங்கத் துறையில் அறிமுகப்படுத்துவதற்கு அண்மைக் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனடிப்படையில், வங்கி சங்கங்களில் வைப்புக்களை ஊக்குவிக்கும் நோக்கில் வங்கி நிதிச் செயற்பாடுகள் பிரிவின் வைப்பு ஊக்குவிப்பு அலகின் ஊடாக விசேட நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- 2015 ஆம் ஆண்டிலும் சிங்களக் கலாசாரக் வழக்காறுகளையும் விளையாட்டுக்களையும் எதிர்காலச் சந்ததியினருக்காகப் பாதுகாத்தால் மற்றும் சமுதாய வங்கிச் சங்கங்களை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துதல் என்பவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு நாடு முழுவதிலுள்ள ஒவ்வொரு வங்கிச் சங்கத்தையும் உள்ளடக்கும் வகையில்1000 புது வருட விழாக்கள் நடாத்தப்பட்டன. இதற்காக வங்கி நிதிச் செயற்பாடுகள் பிரிவினால் வங்கிச் சங்கங்களுக்கு 10.5 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது.
- சமுதாய வங்கிச் சங்கங்களின் சேமிப்பை ஊக்குவிப்பவதற்காக 2015 ஆம் ஆண்டினுள் பின்வரும் 05 நிகழ்ச்சிகள் திட்டமிட்டு நடாத்தப்பட்டன.

I. சிங்கள - தமிழ் புத்தாண்டை முன்னிட்டு புத்தாண்டுக் கொடுக்கல் வாங்கல் வாரமொன்று பிரகடனப்படுத்தப்பட்டு 1,756 மில்லியன் ரூபா வைப்புக்களாகச் சேகரிக்கப்பட்டது.

II. 2015 மார்ச் 08 ஆந் திகதி சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு திரியமாதா வைப்பு ஊக்குவிப்பு உபாயமுறையொன்று 1 வங்கிச் சங்கத்தில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் போது புதிதாக 26,434 கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் 35.2 மில்லியன் ரூபா சேகரிக்கப்பட்டது.

III. உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர் வைப்புக்களை ஊக்குவிக்கும் நிகழ்ச்சி நடைமுறைப்படுத்தப்பட்டது.

IV. தைப்பொங்கல் தினத்திற்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சி

V. நத்தார் தினத்திற்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சி

## 13.19.பொதுவான விடயங்கள்

**புத்தாண்டில் இப்பிரிவினால் ஆரம்பிக்கப்பட்ட ஏனைய நிகழ்ச்சிகளும் செயற்பாடுகளும்**

- 2015 ஆம் ஆண்டில் வங்கிச் சங்கங்கள் ஐந்து இலக்குகளைக் கொண்டு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் வருடம் முழுவதற்குமான வங்கிச் செயற்பாடுகள் தொடர்பான செயற்பாட்டுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வங்கிச் சங்கங்கள் அதனடிப்படையில் வழிப்படுத்தப்பட்டன.
  பெரும்பாலான வங்கிச் சங்கங்களின் செயற்பாடுகள் ஏற்கனவே கணினி வசதிகளை வழங்கி இணைய வசதியின் ஊடாக தலைமையகத்தின் முகாமைத்துவ தகவல் அலகிற்குத் தகவல்களை வழங்குவதற்கான வழிகாட்டல்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.
- 2015 ஆம் ஆண்டினுள் அரசாங்க நிதியுதவின் கீழ் வங்கிச் சங்கங்களினதும் வங்கிக் கழகங்களினதும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணியின் முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

## 46 புள்ளிவிபரக் குறிப்புக்கள்

### கட்டட நிர்மாணப் பணிகளினதும் திருத்த வேலைகளினும் காணி கொள்வனவுச் செயற்பாடுகளினதும் முன்னேற்றம் 2015.12.31 ஆந் திகதியில் உள்ளவாறு

| நிகழ்ச்சி | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | நிதி முன்னேற்றம் (ரூபா.மில்) |
|---|---|---|
| புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வங்கிச் சங்கங்கள் மற்றும் வங்கிக் கழகக் கட்டடங்களின் பகுதிகளைச் சேர்த்தல் | 31. | 34.99. |
| திருத்த வேலைகள் செய்யப்பட்ட வங்கிச் சங்கங்கள் மற்றும் வங்கிக் கழகக் கட்டடங்கள் | 06. | 1.49. |
| காணி கொள்வனவு | 02. | 7.4. |

- வங்கிச் சங்கங்கள் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளதுடன் இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, மொனராகலை தவிர ஏனைய மாவட்டங்களின் வங்கிச் சங்கங்களை கணினிமயப்படுத்துவற்கான மென்பொருளை உருவாக்குவதற்காக ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், அனைத்து வங்கிச் சங்கங்களினதும் பயனாளிகளின் தரவுத் தொகுதியொன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## திணைக்களத்தின் பெயர் :- வாழ்வின் எழுச்சி திணைக்களம்

| வருடாந்த மதிப்பீடு நிகழ்ச்சி இல | வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிட்ட நிகழ்ச்சியின் பெயர் | (1) வரவு செலவில் மதிப்பீடு செய்தல். | (2) ஒதுக்கீட்டினை பிரித்தல் | (3) மு.ரெ 66 மற்றும் மு.ரெ 69 மாற்றுதல் | (4) முழு தொகையை பிரித்தல் (1+2+3) | (5) முழு தொகை | (6) புயனின் மிகுதி (4-5) | பக்க இல |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | |
| | **புனருத்தாபனம்** | - | | | | | | |
| 1 | **இலக்கான நிகழ்ச்சிகள்** | *414,860,000* | *9,600,000* | *15,000,000*<br>*(15,000,000)* | *424,460,000* | *328,406,481* | *96,053,519* | 2 |
| 2 | **அபிவிருத்தி நிகழ்ச்சி** | *47,277,040,000* | *5,738,400,000* | *901,000,000*<br>*(901,000,000)* | *53,015,440,000* | *50,977,685,264* | *2,037,754,736* | 3 |
| | **உப மொத்தம் (புனருத்தாபனம்)** | ***47,691,900,000*** | ***5,748,000,000*** | ***0*** | ***53,439,900,000*** | ***51,306,091,745*** | ***2,133,808,255*** | |
| | **மூலதனம்** | - | | | | | | |
| 1 | **இலக்கான நிகழ்ச்சிகள்** | *86,950,000* | *0* | *0* | *86,950,000* | *21,094,203* | *65,855,797* | 2 |
| 2 | **அபிவிருத்தி நிகழ்ச்சி** | *1,233,000,000* | *0* | *0* | *1,233,000,000* | *1,002,902,728* | *230,097,272* | 3 |
| | **உப மொத்தம் (மூலதனம்)** | ***1,319,950,000*** | ***0*** | ***0*** | ***1,319,950,000*** | ***1,023,996,931*** | ***295,953,069*** | |
| | **முழு மொத்தம்** | ***49,011,850,000*** | ***5,748,000,000*** | ***0*** | ***54,759,850,000*** | ***52,330,088,676*** | ***2,429,761,324*** | |